உ

ஸ்ரீசற்குருவேநம:

சத்தப்பிரகரணம்.

சுத்தப் பதிப்பு.

29, VITHIYANATHA MUDALY ST. MADRAS

PRINTED AT THE

MANONMANI VILASUM PRESS,

MADRAS.

1905.

இதன் விலை அணா—௪.

T-UN-716

உ

ஸ்ரீசற்குருவேநம:

சத்தப்பிரகரணம்.

இந்திரபீடம்
கரபாத்திரசுவாமிகள் ஆதீனம்
பிறசை-அருணசலசுவாமிகளால்
நூதன உரைசெய்யப்பட்டதை,
ஞானசுந்தரபிரம்மம்
அவர்களால்,

சுத்தப் பதிப்பு.

VITHIYANATHA MUDALY 29, ST. MADRAS

சென்னை:
மனோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1905.

இதன்விலை அணா—௬.

ஓம்.

ஸ்ரீசற்குருவேநமஃ

சத்தப்பிரகரணம்.

குருஸ்துதி.

ப்ரஹ்மாநந்தம்பரமஸுகதம்கேவலம்ஜ்ஞானமூர்த்திம்
விஶ்வாதீதம்ககநஸத்ருஶம்தத்வமஸ்யாதிலக்ஷ்யம்
ஏகம்நித்யம்விமலமசலம்ஸர்வதாஸாக்ஷிபூதம்
பாவாதீதம்த்ரிகுணரஹிதம்ஸத்குரும்தம்நமாமி. (க)

இதனதுபொருள்.

பிரமானந்த ஸ்வரூபமாகியும், சிரேஷ்டமான சுகத்தைக் கொடுப்பதாகியும், நிர்விகாரமாகியும், ஞானவடிவமாகியும், பிரபஞ்சாதீதமாகியும், ஆகாசத்துக்குச்சமானமாகியும், மஹாவாக்கியங்களுக்கு இலட்சியார்த்தமாகியும், ஒன்றாகியும், நித்தியமாகியும், நின்மலமாகியும், அசைவற்றதாகியும், எப்போதுஞ் சாட்சிமாத்திரமாகியும், பாவனைகளுக் கப்பாற்பட்டதாகியும், முக்குணங்களு மில்லாததாகியுமிருக்கின்ற சற்குருவை நமஸ்காரம் பண்ணுகிறேன்.

இதுவுமது.

மூகாம்பிகாகடாக்ஷாந்மோஹவிஹீநம்கரோதிஶிஷ்யம்யஃ
ஏகாத்மகம்ஶேஷகிரீஶமஶேஷவேதாந்ததேஶிகம்வந்தே. (உ)

இதனதுபொருள்.

மூகாம்பாளது கடாட்சத்தினாலே சீடனை மோகத்தினின்றும் விடுவித்தவராகியும், ஏகஸ்வரூபராகியும், சமஸ்தமான உபநிடதங்களுக் காசிரியராகியு மிருக்கின்ற சேஷகிரீசரென்னு நாமதேயத்தையுடைய ஆசாரியரை நமஸ்காரம் பண்ணுகிறேன்.

இராகத்துவேஷாதிப்பிரகரணம்.

அவையாவன.

தனது நித்தியானந்த சுயம்பிரகாசத்தினின்று ஓரறிவு சங்கற்பரூபமாகத் தோன்றிப் பகிர்முகமானவிடத் துண்டான அறிவறியாமையே பிரகிருதிமகதத்துவமெனவும், அவற்றினின்றும் விகற்பித்தெழாநின்ற அறிவி னறிவறியாமையே மாயை யவித்தையெனவும், அவற்றிற் பிரதிபலித்த ஜீவேஸ்வரசங்கற்ப விகற்பமே ஞானமுதலிய விருபத்தைந்து தத்துவங்களெனவும், அவற்றினின்றுஞ் சங்கற்பரூபமாகப் பரிணமித்ததே பாஞ்சபூத பௌதிகமெனவும், அவற்றைச் சங்கற்ப விகற்பரூபமான சித்தவிருத்தியால் வருகிற இராகத்துவேஷங்களா லனுபவிக்குஞ் சுகதுக்கங்களே விடயமெனவுந்தோற்றிய அத்தியாரோபத்தை அபவாதத்தான் முன்னுண்டான முறைமைப்படி யடக்கித் தனது நிசானந்தத்தை வெளிப்படுத்தும் நிமித்த மருளே திருமேனியாக வெழுந்தருளிய சேஷாத்திரி

சிவனுரென்னும் ஞானுசாரியர் சங்கற்பவிகற்பத்தினுல் விருப்பு வெறுப்புண்டாய் அதனுல் விடையங்களிற் சுழலாநின்ற சித்தத்தின் விருத்தியைக்கெடுத் ததற்குச் சுத்தியுண்டாக்கும் பொருட் டவ்விருப்பு வெறுப்பை இராகத்துவேஷப் பிரகரணமெனவும், அச்சித்தசுத்தியுண்டான விடத்து யதார்த்தத்தைக் காண்பதற் கேதுவாகத்தோற்றின குறியைத் தெரிவித்தற்பொருட் டதனைச் சாதனசதுஷ்டயப் பிரகரணமெனவும், அவை யுதித்தவிடத்துப் பாஞ்சபூதபவுதிக முதலிய வனைத்துஞ் சடமெனத் தெரிவித்தற்பொருட் டவற்றைத் தூலப்பிரகரணமெனவும், அவைகள் சடமானவிடத் தவைகளை மேற்சித்தைக்கொண் டசைப்பிக்கு மந்தக்கரணங்களைச் சடமென்றறிந்தவைகளை நீக்குதற்பொருட் டவற்றைச் சூக்குமப்பிரகரணமெனவும், அவைகளடங்கினவிடத் தவைகட்குக் காரணமான மாயை யவித்தையை யாரோபிதமென்றறிந் தகற்றும்பொருட் டவற்றைக் காரணப்பிரகரணமெனவும், அவைகணீங்கினவிடத் தெதிரிட்ட சீவேஸ்வரர்களை மறைத்த மகதத்துவம் பிரகிருதிகளைச் சிற்பிரகாசமாக நீக்குதற்பொருட் டவைகளை மகாகாரணப் பிரகரணமெனவும், இவைகளனைத்துந் தற்பிரகாசமாக நீங்கினவிடத்துத் தனது சுயம்பிரகாசமாக விளங்காநின்ற நித்தியானந்தமே நமது ஸ்வரூபமெனத் தெரிவிக்கும்பொருட் டதனை நிசானந்தானுபூதிப் பிரகரணமெனவும், பகுத்துக்கூறிய ஏழு பிரகரணங்களாம். இங்ஙனமுறையாகக் கூறத்தொடங்கிய விப்பிரகரணங்களுண் முந்தின பிரகரணத்தில் இராகத்துவேஷாதிகளின் ஸ்வரூபத்தை நிருபிக்கிறுர்,

சுலோகம்.

காமாத்யா꞉ஷோடஶகுணஹேயோபாதேயதாம்கதா꞉
தேஷாம்ஸ்வரூபம்ப்ரதமம்தாவத்தத்ரநிரூப்யதே. (ரு)

இதனதுபொருள்.

காமமுதற் பதினாறு குணங்களில் இராகமுதற் பதின் மூன்றுந் தள்ளத்தக்கனவும், இச்சைமுதன் மூன்றுங் கொள்ளத்தக்கனவுமாம். அவைகளின் ஸ்வரூபம் நிரூபிக்கப்படுகின்றது. இராகத்தி னம்சமே காமமாதலாற் காமாதியெனக் கூறினார். இப்பதின்மூன்றும் இராகத்துவேஷங்களின் பரியாயமெனக் கொள்க.

எந்த இராகத்துவேஷங்களினாற் றிரிவித கரணங்களுந் திரிவிதகன்மங்களைச் செய்கின்றதோ, அந்த இராகத்துவேஷங்களின் குணங்களை நிரூபிக்கிறோம். அவையாவன:- இராகம், துவேஷம், காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மச்சரம், ஈரிஷை, அசூயை, டம்பம், தர்ப்பம், அகங்காரமெனப் பதின்மூன்றாம். இப்பதின்மூன்றும் மோட்சமடைதற்கு விக்கினமாயிருக்கின்றபடியா லிவற்றை முமூட்சுவானவர்கள் காலத்திரயங்களிலும் பரிசியாமற் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம். இவைகளின்விவரம் வருமாறு:—

க. இராகம்.

பரஸ்திரீகமனம் பண்ணவேண்டுமென்று விகற்பித்து வருகிற சித்தவிருத்திக்கு இராகமென்றுபேர்; இதை முமூட்சு

வானவர்கள் காலத்திரயத்திலுமில்லாமற் சர்வாத்மனு விட்டு விடவேண்டியது. ஏன் விடவேண்டியதென்றால், பூருவத்தி லிராவணன் பரதாரமான சீதையம்மனை யிச்சித்த இராகத் தினாலவன் பிராணஹானி, பந்துநாசம், இராச்சியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவைமுதலான அநேக வருத்தங்கள் அனுபவித்ததும், இன்னுஞ் சகோதரரான சுந்தோபசுந்தரா ளிருவருந் திலோத்தமையைக்கண் டுன்பாரி என்பாரியென் றடித்துக்கொண் டிறந்ததும், இன்னு மநேகம்பேர் இந்த இரா கத்தினாற் றுக்க மனுபவித்ததுஞ் சாத்திரங்களிற் கண்டிருக் கிறோ மானபடியினாலும், இப்போதிருக்கிறபேர்களு மிந்த இராகத்தினா லநேக துக்க மனுபவிப்பதைப் பிரத்தியட்ச மாகக் கண்டிருக்கிறபடியினாலும், இனிப் பிறக்கப்போகிற பேர்க ளிடத்திலு மிந்த இராகமிருந்தாற் றுக்கமே யனுபவிப் பார்களென்று தோற்றுகிறபடியினாலும், இந்த இராகத்தை முமூட்சுவானவர்கள் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது சித்தம்.

உ. துவேஷம்.

இப்படியே தனக்கொருவ னபகாரம் பண்ணினா லவனுக் குப் பதிலபகாரம் பண்ணவேண்டுமென்று விகற்பித்துவரு கிற சித்தவிருத்திக்குத் துவேஷமென்று பேர். இதை முமூட் சுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது. ஏன் விட்டுவிடவேண்டியதென்றால், பூருவத்தில் இரணியகசிபன் றன்றமையனைக்கொன்ற நாரா யணனைக் கொல்லவேண்டுமென்ற துவேஷத்தினா லவனு

டைய பிராணஹானி, பந்துநாசம், இராச்சியஹானி, இகபரங் களிலபகீர்த்திக ளிவைமுதலான அநேக வநர்த்தங்க ளனுப வித்தது மின்னு மநேகம்பே ரிந்தத் துவேஷத்தினல் துக்க மனுபவித்ததுஞ் சாத்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியி ஞலும், இப்போ திருக்கிறபேர்களு மிந்தத் துவேஷத்தின லநேகதுக்க மனுபவிப்பதைப் பிரத்தியட்சமாகக் கண்டிருக் கிறபடியினுலும், இனிப் பிறக்கப்போகிறபேர்களிடத்திலு மிந்தத் துவேஷமிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினுலும் இந்தத் துவேஷத்தை முமூட்சுவா னவர்கள் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது சித்தம்.

௫. காமம்.

இப்படியே புத்திரமித்திர களத்திர கிரகக்கிராம க்ஷேத் திர தனதான்யாதிகள் மேன்மேலுஞ் சம்பாதிக்க வேண்டு மென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்குக் காமமென்று பேர். இதை முமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லா மற் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது. ஏன் விடவேண்டிய தென்றுல், பூருவத்தில் நரகாசுரன் இலட்சம் ஸ்திரீகளைக் கலி யாணஞ்செய்வதற் காசித்துத் தேவஸ்திரீகள் பதினுயிரம்பேர் களைச் சிறைபிடித்து வந்ததைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியா லவன் பிராணஹானி, பந்துநாசம், இராச்சியஹானி, இகபரங் களிலபகீர்த்தி யிவைமுதலான துக்கங்களனுபவித்ததுமின்னு மநேகம்பேர் துக்க மனுபவித்ததுஞ் சாத்திரங்களிற் கண் டிருக்கிறோமானபடியினுலு மிப்போதிருக்கிறபேர்களு மிந்தக் காமத்தினு லநேகதுக்க மனுபவிப்பதைப் பிரத்தியட்சமாகக்

கண்டிருக்கிற படியினாலும், இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்தக் காமமிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலும், இந்தக் காமத்தை முமூட்சுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம்.

௪. குரோதம்.

இப்படியே தனக்குவேண்டிய காரியங்களி லொருவன் விக்கினம்பண்ணினா லவனிடத்தி லாக்கிரகமாக விகற்பித்து வருகிற சித்தவிருத்திக்குக் குரோதமென்று பேர். இதை முமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது. ஏன் விடவேண்டிய தென்றால், பூர்வத்தில் பகாசூரன் றனது புசிப்பிற்கு விக்கினஞ்செய்த வீமராஜன்பேரிற் குரோதம்வைத்ததனா லவன் பிராணஹானி, பந்துநாசம், இராச்சியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவை முதலான அனேக வனர்த்தங்க ளனுபவித்தது மின்ன மனேகம்பே ரிந்தக் குரோதத்தினால் துக்க மனுபவித்ததுஞ் சாத்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினாலும், இப்போதிருக்கிறபேர்க ளிந்தக் குரோதத்தினாற் றுக்கமனுபவிக்கிறது பிரத்தியட்சமாகக் கண்டிருக்கிறபடியினாலும், இனிப் பிறக்கப்போகிறபேர்களிடத்தி லிந்தக் குரோதமிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலு மிந்தக் குரோதத்தை முமூட்சுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம்.

௫. உலோபம்.

இப்படியே தான் சம்பாதித்த பதார்த்தங்களி லொருத்தருக் கொருகாசளவு செலவுபண்ணலாகாதென்று விகற்பித்து

வருகிற சித்தவிருத்திக்கு உலோபமென்று பேர். இதை முமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது. ஏன் விடவேண்டியதென்றால், பூர்வத்தில் துரியோதனனானவன் சூதாடிஜெயித்த பாண்டவர்களுடைய இராச்சியத்தி லவர்கள் வசிக்கக்கூட விடங்கொடுக்க மாட்டேனென்ற உலோபத்தினு லவன் பிராணஹானி, பந்துநாசம், இராச்சியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவை முதலான அனேக வனர்த்தங்க ளனுபவித்ததும், இன்னு மனேகம் பேர் துக்கமனுபவித்ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறோமானபடியினுலும், இப்போதிருக்கிறபேர்க ளிந்த உலோபத்தினு லநேகதுக்க மனுபவிப்பதும் பிரத்தியட்சமாகக் கண்டிருக்கிற படியினுலும், இனிப் பிறக்கப்போகிறபேர்களிடத்திலு மிந்த உலோபம் இருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினுலும், இந்த உலோபத்தை முமூட்சுவானவர்கள் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது சித்தம்.

௬. மோகம்.

இப்படியே தான் சம்பாதித்த பதார்த்தத்தின்பேரிற் பிரியமோதப் பிரமோதமாய் விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு மோகமென்று பேர். இந்த மோகத்தை முமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது. ஏன் விடவேண்டியதென்றால், பூருவத்தில் தசரதமகாராஜன் தனது ஜேஷ்டபுத்திரனை ஸ்ரீராமன் பேரில்வைத்த மோகத்தினு லவர் மாதுருவாக்கிய பரிபாலனநிமித்தங் காட்டுக்குப்போக அதனு லிவர் பிராணஹானி

பந்துநாசம், இராச்சியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவை முதலான அநேக வனர்த்தங்க ளனுபவித்தது மின்னுமிந்த மோகத்தின லநேகம்பேர் துக்க மனுபவித்ததுஞ் சாஸ்திரங் களிற் கண்டிருக்கிறோ மானபடியினாலும், இப்போதிருக்கிற பேர்க ளிந்த மோகத்தின லநேகந் துக்கங்க ளனுபவிக்கிறது பிரத்தியட்சமாகக் கண்டிருக்கிறபடியினாலும், இனிப் பிறக்கப் போகிறபேர்களிடத்திலு மிந்த மோகமிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலு மிந்த மோக த்தை முமூட்சுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டி யது சித்தம்.

எ. மதம்.

இப்படியே ஐஸ்வரியர் தமக்குள் மதத்தினாற் கெர்வித் துக் கிருத்தியாகிருத்தியந் தெரியாமல் விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு மதமென்று பேர். இந்த மதத்தை முமூட் சுவானவர்கள் காலத்திரயத்திலுமில்லாமற் சர்வாத்மனா விட்டு விடவேண்டியது. ஏன் விடவேண்டியதென்றால், பூருவத்தில் கார்த்தவீரியார்ச்சுனனானவன் றன்னிடத்தில் வந்த மகாரிஷி யான நாரதரை மதித் துபசாரம்பண்ணாமற் கெர்வித்திருந்த தைக்கேட்ட பரசுராமனா லவன் பிராணஹானி, பந்துநாசம், இராச்சியஹானி, இகபரங்களில் அபகீர்த்தி யிவை முதலான அநேக வனர்த்தங்களனுபவித்தது மின்னு மிந்த மதத்தினால் அநேகம்பேர் துக்கமனுபவித்ததுஞ் சாத்திரங்களிற் கண்டிருக் கிறோ மானபடியினாலும், இப்போதிருக்கிறபேர்க ளிந்த மதத் தின லநேகதுக்க மனுபவிக்கிறது பிரத்தியட்சமாகக் கண்

டிருக்கிறபடியினுலும், இனிப் பிறக்கபோகிறபேர்களிடத்தி லும் இந்த மதமிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினுலும், இந்த மதத்தை முமுட்சுவானவர் கள் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது சித்தம்.

அ. மச்சரம்.

இப்படியே ஒருத்தர் சுகமாயிருந்தா லவர்களைப் பார்த் துச் சகிக்காமல் விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு மச்சர மென்று பேர். இந்த மச்சரத்தை முமுட்சுவானவர்கள் காலத் திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது. ஏன் விடவேண்டியதென்றுல், பூருவத்தில் சிசுபாலனுனவன் தருமராஜன் ராஜசூயயாகத்தி லக்கிர தாம்பூலம் வாங்கத் தக் கவராரென்று விசாரித்து ஸ்ரீகிருஷ்ணசுவாமிக்குக் கொடுத்த தைச் சகிக்காமல் மச்சரப்பட்டதினு லவனுடைய பிராண ஹானி, பந்துநாசம், இராச்சியஹானி இகபரங்களி லபகீர்த்தி யிவை முதலான அனேக வனர்த்தங்க ளனுபவித்தது மின்னு மிந்த மச்சரத்தினு லநேகம்பேர் துக்கமே யனுபவித்ததுஞ், சாத்திரங்களிற் கண்டிருக்கிறே மானபடியினுலும், இப்போ திருக்கிற பேர்க ளிந்த மச்சரத்தினுற் றுக்கமே யனுபவிக்கிறது பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினுலும், இனிப் பிறக்கப் போகிறபேர்க ளிடத்திலு மிந்த மச்சர மிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினுலும், இந்த மச் சரத்தை முமுட்சுவானவர்கள் சர்வாத்மனு விட்டுவிடவேண் டியது சித்தம்.

கூ. ஈரிஷை.

இப்படியே தனக்குவந்த துக்கம் பிரத்தியாருக்கு வரலாகாதாவென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு ஈரிஷையென்று பேர். இந்த ஈரிஷையை முமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது. ஏன் விடவேண்டியதென்றால், பூருவத்தில் அருணுட்சதன் தனக்கு வந்த துக்கந் தனதிஷ்டனுன வாணுசுரனுக்கு வரலாகாதாவென் றெதிர்த்த வீரிஷையினுற் பிராணஹானி, பந்துநாசம், இராச்சியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவை முதலான அநேக வநர்த்தங்க ளனுபவித்தது மின்னு மிந்த வீரிஷையினு லநேகம்பேர் துக்கமனுபவித்ததுஞ் சாத்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினுலும், இப்போதிருக்கிறபேர்களிந்த வீரிஷையினுற் றுக்கமே யனுபவிப்பதைப் பிரத்தியட்சமாகக் கண்டிருக்கிறபடியினுலு மினிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்த வீரிஷை யிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினுலும், இந்த வீரிஷையை முமூட்சுவானவர்கள் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது சித்தம்.

க0. அசூயை.

இப்படியே தனக்குவந்த சுகம் பராளுக்கு வரலாமாவென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு அசூயையென்றுபேர். இதை முமூட்சுவானவர்கள் காலத்திரையத்திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது. ஏன் விடவேண்டியதென்றால், பூருவத்தில் பவுண்டரீக வாசுதேவ

னனவன் தனக்கும் வாசுதேவன், கிருஷ்ணனுக்கும் வாசுதேவ னென்று பேராவென்கிற அசூயையினு லவரிடத்தெதிர்த்துப் பிராணஹானி, பந்துநாசம், இராச்சியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவை முதலான அநேக வநர்த்தங்க ளனுபவித்தது மின்னு மநேகம்பேரிந்த வசூயையினுற் றுக்கமே யனுபவித்த துஞ் சாத்திரங்களிற் கண்டிருக்கிறே மானபடியினுலும், இப்போதிருக்கிறபேர்களு மிந்த அசூயையினுற் றுக்கமே யனு பவிப்பது பிரத்தியட்சமாகக் கண்டிருக்கிற படியினுலும், இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்தி லிந்த வசூயை யிருந் தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியி னுலு மிந்த அசூயையை முமூட்சுவானவர்கள் சர்வாத்மன விட்டுவிடவேண்டியது சித்தம்.

கக. டம்பம்.

இப்படியே தான் பண்ணின தருமத்தை நாலுபேரும் பார்த்து பளா நன்ருயிருக்கின்றதென்று சொல்லவேண்டு மென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு டம்பமென்று பேர். இதை முமூட்சுவானவர்கள் காலத்திரையத்திலு மில்லா மற் சர்வாத்மன விட்டுவிடவேண்டியது. ஏன் விடவேண்டிய தென்ருல், பூருவத்தில் நபூருவமகாராஜனுனவன் துருவாசரிஷி யைப் பார்த்து நான்செய்த யாகங்களைப்போல யார்செய்யப் போகிருர்கள், இது நன்ருயிருக்கிறதேயென்று கேட்க, யானைத் துதிக்கைபோல ஆயிரம்வருஷம் நெய்சொரிந்து யாகஞ்செய்தவனு மிப்படி கேட்கவில்லை. ஈதென்ன டம்ப யாகமென்று சொன்னவரைக் கோபித்த அவனது யாகத்

தோடு மவன் பிராணஹானி, பந்துநாசம், இராச்சியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவை முதலான அநேக வனர்த்தங்க ளனுபவித்தது மின்னு மிந்த டம்பத்தினு லநேகம்பேர் துக்க மனுபவித்ததுஞ் சாத்திரங்களிற் கண்டிருக்கிறோமான படியினாலும், இப்போதிருக்கிறபேர்க ளிந்த டம்பத்தினாற் றுக்கமே யனுபவிப்பது பிரத்தியட்சமாகக் கண்டிருக்கிற படியினாலும், இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்த டம்பமிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்று கிறபடியினாலு மிந்த டம்பத்தை முமுட்சுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம்.

கூஉ. தர்ப்பம்.

இப்படியே புத்திர மித்திர களத்திர தனதானியாதி சம்பத்துத் தனக்கேயுண்டு, தனக்கொருத்தருஞ் சமானமில்லை யென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்குத் தர்ப்பமென்று பேர். இதை முமுட்சுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது. ஏன் விடவேண்டிய தென்றால், பூருவத்திற் சதகண்டராவணனனவன் ஐஸ்வரியத்திற் றனக்கொருத்தருஞ் சமானமில்லையென்று அமரர்களுக்கு உபத்திரவஞ் செய்ததை நாரத ரிராமருக்கறிவிக்க, அவர் பாரியான சீதையம்மனா லவன் பிராணஹானி, பந்துநாசம், இராச்சியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவை முதலான அநேக வனர்த்தங்க ளனுபவித்தது மின்னு மிந்தத் தர்ப்பத்தினு லநேகம்பேர் துக்கமே யனுபவித்ததுஞ் சாத்திரங்களிற்

கண்டிருக்கிறோ மானபடியினாலும், இப்போதிருக்கிறபேர்களிந்தத் தர்ப்பத்தினாற் றுக்கமே யனுபவிப்பது பிரத்தியட்சமாகக் கண்டிருக்கிறபடியினாலும், இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்தத் தர்ப்பமிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலு மிந்தத் தர்ப்பத்தை முமுட்சுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம்.

கரு. அகங்காரம்.

இப்படியே அடா என்னை யறியாயா! நான் பிடித்த காரியம் விடுவேனா! நீயாவெனக்குப் புத்திசொல்கிறவனென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு அகங்கார மென்றுபேர். இதை முமுட்சுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமல் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது. ஏன் விடவேண்டியதென்றால், பூருவத்தில் மதுகைடவரென்பவர்கள் மகாவிஷ்ணுவோடு பதினாயிரம்வருஷம் யுத்தஞ்செய் திளையாமலவர்வரங்களுக் காசியாமற் றாங்களந்த விஷ்ணுவுக்கு வரங்கொடுத்த அகங்காரத்தினாற் பிராணஹானி, பந்துநாசம், இராச்சியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவை முதலான அநேக வனர்த்தங்க ளனுபவித்தது மின்னு மிந்த அகங்காரத்தினா லநேகம்பேர் துக்கமனுபவித்ததுஞ் சாத்திரங்களிற் கண்டிருக்கிறோமானபடியினாலும், இப்போதிருக்கிறபேர்க ளிந்த அகங்காரத்தினாற் றுக்கமே யனுபவிப்பது பிரத்தியட்சமாகக் கண்டிருக்கிறபடியினாலும், இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலிந்த அகங்காரமிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்க ளென்று

தோற்றுகிறபடியினாலு மிந்த அகங்காரத்தை முமுட்சுவான வர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம்.

இந்த இராகமுதல் அகங்கார மீறான பதின்மூன்று குணங்களினா லிராவணன்முதல் மதுகைடவர்க ளீறானபேர்கள் மஹாசமர்த்தர்களாயிருந்து மவர்கள் பிராணஹானி முதலான அநேக வனர்த்தங்கண் முன்னனுபவித்தது சாத்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினாலு மிப்படியே சத்தியவர்த்தமான காலத்திலு மிந்த இராகாதிகுணங்களா லநேகஜனங்கள் பிராணஹானிகளும், அநேக ரோகங்களும், அநேக திரவிய நாசங்களும், பந்துக்கள் விரோதங்களும், அபகீர்த்திகளும் இவை முதலான அநேக வனர்த்தங்க ளனுபவிக்கிறது பிரத்தியட்சமாகக் கண்டிருக்கிறோ மானபடியினாலும், இனிப் பிறக்கப்போகிறபேர்களு மிந்த இராகாதிகுணங்களி னின்றும் விடுபடாமற் போனார்களாகி லிப்படியே யநேக வனர்த்தங்க ளனுபவிப்பார்களென்று தோற்றப்படுகிற படியினாலும், இந்த இராகாதி பதின்மூன்று குணங்களு மோக்ஷமார்க்கத்துக்குச் சத்துருவாயிருக்கிறபடியினாலும், ஜநநமரணப் பிரவாகரூபமான நரகத்துக் கேதுவாயிருக்கிறபடியினாலும், இப் பதின்மூன்று குணங்களையு முமுட்சுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம். இவைகளாலுண்டான ஜநநமரணமே நரகமென்பதாம். இதற்குச் சமுசயமில்லை. ஜநநமரணரூபமான தேகமே நரகமென்பதற்குப் பிரமாணம்: எங்கே சரீரமுண்டோ, அங்கேயெல்லாந் துக்கமுண்டு; எங்கே சரீரமில்லையோ அங்கேயெல்லாந் துக்கமில்லையென்று வேதத்திற்

சொல்லியிருக்கிறபடியினு லிந்தச் சரீரமே சகல துக்கங்களுக் குஞ் சகல வனர்த்தங்களுக்கு மேதுவாக விருப்பதினு லிந்தச் சரீரமே நரகமென்று சொன்னது சித்தம். ஆதலா லிந்தச் சரீ ரத்துக் கேதுவான விப் பதின்மூன்று குணங்களையு முமுட்சு வாயிருக்கப்பட்டபேர்க ளவசியம் விட்டுவிடவேண்டியது சித் தம்.

இனிக் கொள்ளத்தக்கவைகளான விச்சைமுதன் மூன்று குணங்களையு நிரூபிக்கிறோம். அவையாவன:—

கசு. இச்சை.

பசிதாகநிமித்த மன்னபானுதி கிராகியமும், மலமூத்திர விசர்ச்சனமும் பண்ணவேண்டுமென்று வருகிற சித்தவிருத் திக் கிச்சையென்றுபேர். இவை பண்ணுமற்போனுற் றுக்க மும் பண்ணினுற் சுகமுமாயிருக்கும். இதனுற் பர்தமோக்ஷஞ் சுவர்க்கநரகமில்லை யாதலாற் கொள்ளத்தக்கதாம்.

கரு. பத்தி.

இப்படியே மஹாதேவரிடத்திற் பிரியம்வருகிற சித்த விருத்திக்குப் பத்தியென்றுபேர்.

கசு. சிரத்தை.

குருவேதாந்தசாத்திரங்களின் மிகவும் விசுவாசம்வைத்த சித்தவிருத்திக்குச் சிரத்தையென்று பேர். இந்தப் பத்திசிரத் தை முத்தியை யடைவிப்பதற் கேதுவாதலினுலும், பூருவத் திற் கட்டுவாங்கதனென்கிற மகாராசன் இந்தச் சிரத்தாபத்தி

யினு லிரண்டுநாழிகையில் முத்தியை யடைந்தானென்று சாத்திரங்களிற் கண்டிருக்கிறே மானபடியினாலும் முமூட்சு வானவர்க ளிந்தச் சிரத்தாபத்திகளை யவசியம் பண்ணவேண் டியது சித்தம். இராகாதி பதினாறுகுணங்களும் நிரூபிக்கப் பட்டன.

இராகத்துவேஷாதிப்பிரகரணம்

சம்பூரணம்.

இரண்டாவது

சாதனசதுஷ்டயப்பிரகரணம்.

முற்பிரகரணத்திற் கற்பனாரூபமான விஷயசுகங்களைப் பிரியமாக விசுவசித் ததிற் சுழலாநின்ற மனோவிருத்திக் கவைக டுன்பமெனத் தெரிவித் தவ்விருத்தியை விஷயசுகங்களினின்று நீக்கி மேல் யதார்த்தசுகத்திற் பிரியம்வைக்கும்படி செய்ததனு லுண்டான சிரத்தாபத்தியினுற் சித்தசுத்தியுண்டாக்கி, பின்பு அவ் யதார்த்தம் வெளிப்படுதற் கேதுவான சாதனசதுஷ்டயப் பிரகரணம் நிரூபிக்கிறுர்.

சுலோகம்.

சதுஷ்டயம்ஸாதநாநாம்வேதாந்தேஷுப்ரதிஷ்டிதம்
தஸ்யஸ்வரூபம்க்ரமதஸ்தாவத்தத்ரநிரூப்யதே. (ச)

இதனது பொருள்.

வேதாந்தத்தி னுன்கு சாதனங்க ளதிகாரிகளுக்காகச் சொல்லியிருக்கின்றன. எந்தச் சாதனசதுஷ்டய சம்பத்தியி னுன் யாவரும் மோக்ஷமடைவார்களோ, வந்தச் சாதனசது ஷ்டய சம்பத்தியை நிரூபிக்கிறோம்.

அவையாவன: நித்தியாநித்திய வஸ்துவிவேகம், இகபர மூத்திரார்த்த பலபோகவிராகம், சமாதிசட்கசம்பத்தி, முமூ ட்சுத்துவமென நான்குவிதமாம். இவற்றில் நித்தியாநித்திய வஸ்து விவேகமென்பது பிரமமே நித்தியவஸ்து, சகத் தநித் தியவஸ்துவெனப் பகுத்தறிவதாம்.

இச்சக மநித்தியமென்ப தெப்படியென்றால், இவை பூத பவுதிகாத்மகமானபடியினு லனித்தியமேயாம். இங்ஙனம் பூத பவுதிகாத்மகமாகத் தோற்றப்படுகிற சகத்தின்முன்னே பவு திகங்களுக் கநித்தியத்துவம் நிரூபிக்கிறோம்.

அப்பவுதிகமாவ தியாதெனில் நால்வகையோனி, எழு வகைத்தோற்றம், எண்பத்துநான்குலக்ஷம் பேதங்களாயுள்ள சரீரங்களாம்.

அவற்றில் நால்வகையோனி யென்பது சராயுசம் அண் டசஞ் சுவேதசம் உற்பீசமென்பனவாம். இவற்றிற் பையிற் கட்டுப்பட்டுப் பிறப்பது சராயுசமும், முட்டையிற் கட்டுப் பட்டுப் பிறப்பது அண்டசமும், வியர்வையிடமாகப் பிறப் பது சுவேதசமும், பூமியிடமாகப் பிறப்பது உற்பீசமுமாம்.

எழுவகைத்தோற்றமென்பது தேவரும் மானிடரும் மிருகமும் பட்சிகளும் ஊர்வனவும் நீர்வாழ்வனவுந் தாபரங்களுமாம்.

எண்பத்துநான்குலக்ஷம் பேதமென்பது தேவபேதம் பதினாலுலக்ஷமும், மானிடபேத மொன்பதுலக்ஷமும், மிருகபேதம் பத்துலக்ஷமும், பட்சிபேதம் பத்துலக்ஷமும், ஊர்வனபேதம் பதினொருலக்ஷமும், நீர்வாழ்வனபேதம் பத்துலக்ஷமும், தாபரபேதம் பதினெட்டுலக்ஷமுமாம்.

இவற்றில் தேவ கந்தருவ சித்த சாத்திய கின்னர கிம்புருட குய்யக வித்தியாதர யட்ச ராக்ஷத பூதப்பிரேத பிசாச சாகினி டாகினி வேதாள ஆதியான தேவசரீரங்களும், மனு மாந்தாதி சக்கிரவர்த்தி பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் முதலான நரசரீரங்களும், காமதேனு சிம்ம முதலான மிருகசரீரங்களும், அன்னங் கருடன் முதலான பட்சிசரீரங்களும், சேட னெறும்பு முதலிய வூர்வனசரீரங்களும், மகர மச்சங் கூர்மமுதலிய நீர்வாழ்வன சரீரங்களும், கற்பகவிருக்ஷம் பாரிசாதமுதலிய தாபரசரீரங்களுமாம்.

பூர்வத்தி லித்தேவர்முதலிய எண்பத்துநான்குலக்ஷம் பேதமாயுள்ள சரீரங்களும் நசித்துப்போனது சாத்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினாலும், இப்படியே சத்தியவர்த்தமான காலத்திலுமிருக்கின்ற மாதா பிதா முதலான சகல சரீரங்களும் நசிப்பது பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிற படியினாலும், இனிப் பிறக்கப்போகிற சகல சரீரங்களு மிப்படியே நசிக்குமென்று தோற்றப்படுகிறபடியினாலு மிந்தப் பவுதிகமான சகலசரீரங்களும் அநித்தியமென்பது சித்தம்.

இப்படியே பிருதிவியாதி பஞ்சபூதங்களுக்கும் அநித்தியத்துவம் நிரூபிக்கிறோம்.

அஃதெப்படியென்றால், இப்பூதங்கள் பிறந்திருக்கிறபடியினாலும், அவயவிகளா யிருக்கிறபடியினாலும், பிரளயகாலத்தி னசித்துப்போகிறபடியினாலும் அநித்தியமேயாம்.

அவைக ளெப்படி நசிக்கிறதென்றால், பிரமப்பிரளயம் வருகிறகாலத்திற் பனிரண்டுசூரியர்களு முதயமாய் நூறு வருஷ மழையில்லாமலெரித்துச் சகத்தெல்லாம் பஸ்பம்பண்ணிப் பூமியைத் தாங்கிக்கொண்டிருந்த வாதிசேடனுடைய மகுடங்களைப் பஸ்பம்பண்ணுகிறபோ தந்த வாதிசேடனுடைய முகங்களிலிருந்து காளகூட விஷாக்கினிபிறந் தந்த விஷாக்கினியுஞ் சூரியாக்கினியுங்கூடி யந்த ஆதிசேடன்முதற் றுவாதசாதித்தாளையும் பஸ்பம்பண்ணி யப்படிப் பஸ்பம் பண்ணின அக்கினியினின்றுஞ் சத்தமகா மேகங்கள் பிறந்து நூறுவருஷம் யானைத்துதிக்கைபோல வருஷதாரைகள் வருஷிக்கும். அந்தவருஷசலமே காரணமாநிற்கும். அந்தச்சலத்தில் அப்பூமி பஸ்பம் விலயமாகும். அப்போதந்தச்சலம் வாயுஸ்தம்பமாநிற்கும். அப்படி நிற்கின்ற சலத்தில் வடவானலம் பிறந் தந்த வகாரணவமான சலமெல்லாங் கிரகிக்கும். அவ்வடவாக்கினியும் பிரசண்டவாயுவி லீனமாகும். அந்த வாயுவுமாகாசத்தி லீனமாகும். அவ்வாகாசமு மஞ்ஞானத்தி லீனமாகும். அவ்வஞ்ஞானமும் பிரமத்தி லீனமாகும். அப்பிரமமொன்றுமே சேஷித்துநிற்கும். ஆனபடியினாற் பஞ்சபூதபவுதிகாத்மகமான சகத் தநித்தியமென்று சொன்னதும், இப்படி

விசேஷித்துநின்ற பிரமத்துக்கு வேறே காரணமில்லாதபடி யாற் பிரமமே நித்தியமென்று சொன்னதும் சித்தம்.

இங்ஙனம் நித்தியாநித்திய வஸ்துக்களி னிச்சயந் தெரிதலாகிய முதற்சாதனங் கைவந்தாற் போதாதோவென்றாற் போதாது. ஏன் போதாதென்றால் சிலவித்துவான்கள் சாஸ்திரபாண்டித்தியத்தினாலாத்மாவொன்றுமேநித்தியமென்றும் சகத் தநித்தியமென்றுஞ் சொல்லிக்கொண்டு, ஸ்திரீ புத்திர தனதானியாதி போகங்களி லிச்சைவைத்துக்கொண்டிருக்கிறதினா லநித்தியமானது நித்தியமென்றுவருமாதலா னிரண்டாஞ் சாதனமான விகாமுத்திரார்த்த பலபோகவிராகமுஞ் சம்பாதிக்கவேண்டும்.

இவ்விகாமுத்திரார்த்த பலபோகவிராகமாவ தியாதென்னு லதையும் நிரூபிக்கிறோம்.

அஃதாவது: இகலோக வைராக்கியமென்றும், பரலோக வைராக்கியமென்று மிரண்டுவிதமாம்.

இவற்றி லிகலோக வைராக்கியமாவது: ஸ்ரக்கு சந்தன வநிதாதி விஷயங்களில், வாந்தாசன மூத்திரபுரீஷங்களி லெப்படி யிச்சைவாராதோ, அப்படி யிச்சைவாராமற் போகிறது. இவ்வித வைராக்கிய மில்லாவிட்டா லிகத்திற் றான்சம்பாதிக்க வேண்டுமென்கிற புத்திர மித்திர களத்திர பசு பிரத்தியபல பந்து கிரக கிராமக்ஷேத்திர தனதானியாதிகண் முதலியவற்றைச் சம்பாதிக்க வேண்டு மென்றால் மிகவும் பிரயாச அசாத்தியமாயிருக்கிறபடியினாலும், பிரயாசைப்பட் டெத்தனம்பண்ணினால் அப்படி யெத்தனம்பண்ணின பதார்த்தங்களிற் சிறிது

கூடிவருகிறதுஞ் சிறிது கூடிவராமலும் போகிறபடியினாலும், அப்படிக் கூடிவராதபதார்த்தத்தை தொட்டு வெகுதுக்கபரம் பரைகள் வருகிறபடியினாலும், அந்தத் துக்கத்தோடு கூடிக் கொண்டிருக்கிறவேளையிற் பெரியோர்களா யிருக்கப்பட்ட பேர்கள்வந் தேதாகிலுஞ் சற்காரம்பண்ணவேண்டுமென்று கேட்டதுண்டானா லவர்கள்பேரில் யுத்தாயுத்தங்கள் தெரியா மற் கடினமா யிருக்கப்பட்ட சொல்லினாற் றிரஸ்காரம் பண்ணு கிறான். அவர்களை யப்படி சொல்கின்றபோது வீட்டிற்றுயார் முதலானபேர் பிரிய வசனஞ்சொல்லிப் பெரியவர்களை யப்ப டிச் சொல்லலாமாவென்று சொன்னதே யுண்டானா லவர்கள் பேரி லாக்கிரகமாக விழுந்து யுத்தாயுத்தமில்லாத கடினமான சொல்லினா னிராகரிக்கிறானபடியினாலும், அப்படி நிராகரித் ததனா லநேக வனர்த்தங்களும், அநேகதோஷங்களும் வருகிற படியினாலும், அப்பாவத்தினால் நரகங்களில் விழுகிறானபடி யினாலும், இப்படி யசாத்தியமான பதார்த்தங்களினா லித்தனை யனர்த்தங்கள் பிறக்கச்சே சாத்தியமான பதார்த்தங்களினா லனர்த்தங்கள் வருகிறதற்குச் சொல்லவேண்டுமா?

அஃதெப்படியென்றால், சாத்தியமான வொருபெண்சா தியைத் தொட்டுச் சோரபயங்களும், தாயார் தகப்பனார் விரோதங்களும், அண்ணன் தம்பி விரோதங்களும், அன்றித் தான் செய்யவேண்டுமென்கிற நல்ல காரியங்களும் விரோத மாய்த் தன்னை யெண்ணாமல் நடக்கிறபடியினாலும் துக்கமே தோற்றுகிறது. இப்படியே சாத்தியமா யிருக்கப்பட்ட தனத் தைக்குறித்துத் தாயாதிகள் பயமும், இராஜசோராக்கினி பய

மும், இன்னும் இவை முதலான மகாபயதுக்கங்களுக் கேது வாயிருக்கிறபடியினாலும், இப்படியே சாத்தியமான புத்திரனைத் தொட்டுச் சொன்னபேச்சுக் கேளாமற் றிரிகிறானென்றும், புத்திசாலியாகாமற் போனானென்றும், சாரசோரனாக்த் திரிகிறானென்றும், இவை முதலான அனேக துக்கங்கள் வருகிறபடியினாலும், இப்படியே சாத்தியா சாத்தியமாயிருக்கப்பட்ட விப்பதார்த்தங்களினாற் றுக்கமே தோற்றுகிறதானபடியினாலும் இந்த விகலோக வைராக்கியமும் அவசியஞ் சம்பாதிக்கவேண்டியது சித்தம்.

பரலோக வைராக்கியமான தேதென்றால், சுவர்க்கலோக முதற் சத்தியலோகம் வரைக்குமுள்ள சகலலோகபோகங்களும் வாந்தாசனமூத்திர புரீஷங்களி லெப்படி யிச்சையில்லையோ? அப்படி யிச்சையற்றுப் போகிறதாம்.

இப் பரலோகவைராக்கியம் பண்ணாமற்போனாற் றோஷமென்னவென்றால், இகத்தில் நகுஷமகாராசன் தேவேந்திர போகத்தின்பேரி லிச்சைப்பட்டுச் சோடசமகாதானங்களுமசுவமேதயாகங்களுஞ்செய்து சுவர்க்கத்துக்குப்போய்த் தேவேந்திரப்பட்டமுங் கட்டிக்கொண் டிந்திராணியோடு போகிக்கவேண்டுமென்ற அதிக பரபரப்பினாற் பல்லக்கெடுக்கிற சத்தரிஷிகளில் அகத்தியரிஷியை யவமானம் பண்ணினபடியினா லவர் சபிக்க அச்சாபத்தினா லவ் விந்திராணிபோகமுதலான சகலபோகங்களும் வியர்த்தமாய்த் தான் பண்ணின எக்கியதானபலன்களும் வியர்த்தமாய் மலைப்பாம்பாய்ப் பூமியில் விழுந்துபோனபடியினாலும், இன்னு மனேகம்பேர் சுவர்க்காதிபோகங்கள் வேண்டுமென்ற வாசையினா லநேக எக்கியங்களு மநேக

தருமங்களுஞ் செய்து அவைகள் வியர்த்தமா யநேக துக்கங்க ளனுபவிக்கிறார்க ளானபடியினாலும், அச் சுவர்க்கலோகமுதற் சத்தியலோகபரியந்தமுள்ளலோகங்களிலிருக்கிறபிரமாதிசகல தேவதைகளுஞ் சகலரிஷிகளு மொருத்தருக் கொருத்த ரன்னி யோன்னிய சாபத்தினாலு மொருத்தர் பெண்சாதியை யொ ருத்த ரபகரிக்கிறபடியினாலும், இராட்சதர்கள் ராச்சியங் கட் டிக்கொண்டு போவார்க ளென்கிற பயத்தினாலு மொருத்தர் ஐஸ்வரியத்தை யொருத்தர் அபகரிக்கிறபடியினாலு மிப்படியே வைகுண்டத்திலுங் கைலாசத்திலு மிருக்கிறபேர்கள்கூட அன்னியோன்னிய சாபங்களினாற் றுக்கரூபமா யிருக்கிறபடி யினாலு மவ்விடமடைதற்கு மிகவும் பிரயாச அசாத்தியமா யிருக்கிறபடியினாலும் அவசியமாய்ப் பரலோகவைராக்கியம் பண்ணவேண்டியது சித்தம்.

இப்படி யிகபர வைராக்கியங்களாற் சகல போகங்களை யுஞ் சுகதுக்க கன்மங்களையும் விட்டு நிராசையா யிருக்கிற விரண்டாஞ் சாதனங் கைவந்தாற் போதாதோ வென்னிற் போதாது. ஏன் போதாதென்றால், சில பாஷண்டர்கள் காஷாயந்தரித்துச் சன்னியாசியென்று பேரிட்டுக்கொண்டு, சம்சாரத்தையும் மோட்சப் பிரதானமான கன்மங்களையும் விட்டுத் தன்சரீரசவுக்கியம்பண்ணும்பொருட்டுக் குட்சிவாதை தீரச் சில வித்தைகளை கற்றுக்கொண்டு தான் பெரியவனென் கிற பேரினாலெனக்குச் சமானமாரென் றகங்கரித்துஞ் சபித் துந் திட்டியு மிதனால் வெகுதுக்க மடைந்தவனாக முன்னுள்ள வில்லறமும் பின்னுள்ள துறவறமு மின்றி யுபயப் பிரஷ்டத் துவம் வருகிறபடியினால் மூன்றாஞ் சாதனமான சமாதிசட்க சம்பத்தியுஞ் சம்பாதிக்கவேண்டும்.

சமாதிசட்கசம்பத்தியாவ தியாதென்னி லதையும் நிரூபிக்கிறோம்.

அவையாவன: சமம், தமம், உபரதி, திதீட்சை, சமாதானம், சிரத்தை யென ஆறுவிதமாம்.

இவற்றிற் சமமாவது: மனோநிக்கிரகம். அஃதாவது மனதைச் சலியாம லகத்தி லடக்குவதாம்.

இந்த மனோநிக்கிரகஞ் செய்யாமற்போனாற் பூருவத்தி லபிமானித்திருந்த பதார்த்தங்க ணசித்து மவைகளை வாசனையா நினைத்துக்கொண்டே யிருக்கும். அதனாற் றுக்கமே யுண்டாயிருக்கிறபடியினாலும், சத்தியவர்த்தமான காலத்திற் றான் சம்பாதித்த பதார்த்தங்களின் மிகுந்த மோகமா யவைகளை நினைத்துக்கொண்டே யிருக்கும். அப்போ தப் பதார்த்தங்களுக்குச் சற்று விக்கினம்வந்த துண்டானா லதனால் மிகவுந் துக்கமே தோற்றுகிறபடியினாலும், இனி வரப்போகிற பதார்த்தங்களை வாசனையா னினைத்துக்கொண்டே யிருக்கும். அவை வராமற்போனாற் றுக்கமே விளைகிறபடியினாலும், இத் துக்கங்கண் மனதி லடைந்திருக்கச்சே பெரியோர்களது வசனங்கள் பிடிபடாதபடியினாலும், இந்த மனோநிக்கிரக மவசியம் பண்ணவேண்டியது சித்தம்.

தமமாவது: பாகியேந்திரிய நிக்கிரகம். அஃதாவது சுரோத்திராதி ஞானேந்திரிய பஞ்சகமும், வாக்காதி கன்மேந்திரிய பஞ்சகமும் இவ் விந்திரியங்களைச் செயம்பண்ணமற்போனா லிப் பாகேந்திரியம் விஷயங்களிற்போய் விழும். அப்

படியேபோய் விழுந்ததேயுண்டானு லதனுல் மகத்தான ஹானிவரும். அஃதெப்படியென்றால், சத்தியவிஷயத்தினுல் மானுக்கெப்படி ஹானிவந்ததோ, பரிசவிஷயத்தினுல் யானைக்கெப்படி ஹானிவந்ததோ, ரூபவிஷயத்தினுல் விட்டிற்பூச்சிக்கெப்படி ஹானிவந்ததோ, இரசவிஷயத்தினுல் மீனுக்கெப்படி ஹானிவந்ததோ, கந்தவிஷயத்தினுல் வண்டுக்கெப்படி ஹானிவந்ததோ, அப்படியே இந்தப் பாகியேந்திரியங்கள் விஷயங்களிற் சென்றால், மகத்தான ஹானிவருமானபடியினு லிப்பாகியேந்திரியங்கள் விஷயங்களிற் போய் விழாம லவசியம் நிக்கிரகஞ் செய்யவேண்டியது சித்தம்.

உபரதியாவது: ஈஷணாத்திரயத் தியாகப் பூருவகமான சர்வகர்ம சந்நியாசமாம்.

அக்கன்மமாவது: பாவகன்மமெனவும், புண்ணியகன்மமெனவு மிரண்டாம். இவற்றிற் பாவகன்மத்தினு னரகப்பிராப்தியுந் திரியக்காதி சரீரமும் வருகிறபடியினு லிந்தப் பாவகன்ம மவசியஞ் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது சித்தம்.

இப்படியே புண்ணிய கன்மங் காமியார்த்தமாகச் செய்வானேயாகிற் சுவர்க்கலோகப் பிராப்தியும் தேவத்துவமும் மேற்கீழ்ப் போகிறதும் வருகிறதும் ஹானிவிருத்திகளும் லாபாலாபங்களுஞ் ஜநநமரணங்களும் வருகிறபடியினு லிந்தக் காமியார்த்தமான புண்ணிய கன்மங்களையுஞ் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது சித்தம்.

இப்புண்ணியகன்மம் பகவத் பிரீதியாகப் பண்ணினு னிட்காமமாம்,

இந்நிட்காம புண்ணியத்துவாரா சித்தசுத்திவரும், இச் சித்தசுத்தித்துவாரா சற்குருலாபங்கிடைக்கும்; இச் சற்குரு லாபத்துவாரா சிரவண முண்டாம்; இச்சிரவணத்துவாரா மனனமுண்டாம்; இம்மனனத்துவாரா நிதித்தியாசன முண்டாம்; இந்நிதித்தியாசனத்துவாராசமாதிஞானமுண்டாம்; இந்த ஞானத்துவாரா மோட்சமடைவார்களாதலாற் புண்ணிய கன்மங்களை நிட்காமமா யவசியஞ் செய்யவேண்டியது சித்தம்.

ஈஷணாத்திரயத் தியாகமாவது தனத்தினிடத்தும் புத்திரனிடத்துந் தாரத்தினிடத்து மிருக்கின்ற விச்சையை நீக்குதலாம்.

இவ்விதமான வுபரதியை யவசியம் பண்ணவேண்டியது சித்தம்.

திதிக்ஷையாவது: சுகதுக்கங்கள் வரிற் பொருத்திருத்தலாம். அஃதாவது தான் சம்பாதித்திருக்கிற புத்ர மித்ர களத்ராதியான சகல பதார்த்தங்களும் செவ்விதாயிருந்தாற் சுகம். அப் பதார்த்தங்களுக் கோர் விக்கினம் வந்தாற் றுக்கம். இச் சுகதுக்கங்கள், லாபாலாபங்கள், மானாவமானங்கள், செயாபசெயங்களாகிய இவை வந்தபோது சமமாய்ச் சகித்திருத்தலும், தன்னை யொருவர் வாதிக்கிற் றான் தண்டிப்பதற் கதிகார மிருந்தும் தண்டியாமல் பொறுத்த லிவை முதலானவைகளிற் சகித்திருப்பதாம்.

இத்திதிட்சை பண்ணுமற்போனால் இத்தொந்தங்களிலகப்பட்ட அநேக வனர்த்தங்களு மநேகபாபங்களு மநேக சாஞ்சல்யங்களுந் தேகசோஷணங்களும் பெரியோர்கள் சஹ

வாசத்துக்கு விக்கினங்களு மவர்கள்சொல்லும் வசனங்கள் மனதிற் றரியாமல்போகிறது மிவை முதலான தோஷங்கள் அநேகமிருக்கிறபடியினல் இப்பொறுமை ரூபமா யிருக்கப் பட்ட திதீட்சை யவசியம் பண்ணவேண்டியது சித்தம்.

சமாதானமாவது: சடேந்திரியங்களையுஞ் சிரவணத்தி னிறுத்தல். அஃதாவது: பெரியோர்க ளிடத்திற்சேர்ந்து சிரவணம் பண்ணுகிறகாலத்தில் மனது மிந்திரியங்களும் வாசனு வசத்திற் செல்லாமற் றிருப்பிச் சிரவணத்தின்பேரிலே சாத்திரமாக நிறுத்தலாம். இதைப் பண்ணமற்போனற் பெரியோர்கள் வசனிக்கும் வசனங்கள் மனதிற் பிடிபடாமல் விஷயங்களிற் சென்றுகொண்டிருக்கும். அதனற் பெரியோர்கள் சொன்னதிற் பயனில்லாமற் றுனினைத்திருக்கிற காரியமு மாகாமல் உபயப் பிரஷ்டத்துவம்வரும். அதனு லநேக துக்கப்பிராப்திகளுண்டா மதனல் மோட்சத்துக்கு விக்கினங்கள் வருகிறபடியினு லினிச் சமாதானம் அவசியம் பண்ணவேண்டியது சித்தம்.

சிரத்தையாவது: பத்தி விசுவாசமென விரண்டாம்.

அவையாவன: தாய்தந்தை முதலானவர்களிடத்தி லிருக்கிற பிரியங்களெல்லாஞ் சற்குரு வேதாந்த வாக்கியங்களிடத்திலேகாக்கிரமாகவைப்பது விசுவாசமும், ஈஸ்வரனிடத் தேகாக்கிரமாக வைப்பது பத்தியுமாம்.

இவற்றில் சற்குருவினிடத்தின் மிகவும் விசுவாசம் பண்ணவேண்டியது. ஏன் பண்ணவேண்டியதென்றல், அவ மகிமை முன்னதாக நிரூபிக்கிறேம்.

அஃதாவது: பிராந்திரகிதராயும், பரிபூரணராயும், ஞானம் பத்தி வைராக்கிய சம்பன்னராயும், நிரந்தர சந்தோஷத்தை யடைந்தவராயும், நித்தியதிருப்தி யடைந்தவராயும், சச்சிதானந்தப் பிரமஸ்வரூபராயும், தேசகால வஸ்து பரிச்சேத ரகிதராயும், சுசாதி விசாதி சுகத பேத ரகிதராயும், சட்பாவ விகாரரகிதராயும், சுத்த புத்த முத்த நித்திய பரமாநந்த ஸ்வரூபராயும், சர்வபரிபூரண கருணாசாகரராயும், நிர்வியாச்சிய, நிர்லேப, நிர்ச்சங்க, நிர்வாண, நிட்காம, நிரூப, நிரந்தர, நிரவயவ, நிர்விசேஷானந்த, நிருபத்திரவ, நிபத்த, நிர்வேத்திய, நிர்க்குண, நிரஞ்சன, நிச்சல, நிட்பிரபஞ்ச ஸ்வரூபராயும், அச்சேத்திய, அக்கிலேத்திய, அசோஷிய, அதாகிய, அசல, அவாச்சிய, அநாமய, அட்சர, அப்பிரமேய, அசிந்திய, அந்நியபாகிய, அக்குரோத, அவிதர்க்கிய, அதிரிசிய, அநாசிரிய, அநாதார, ஆனந்த, அகண்டாகார ஸ்வரூபராயும், விஸ்வதைஜஸ பிராஞ்ஞைக் கதீதமான பிரத்தியக் சைதன்னியராயும், விராட் டிரண்ணியகர்ப்ப வவ்வியாகிருதங்களை யறிகின்ற சர்வசாட்சியாகியும், மூலப்பிரகிருதியகண்டாகாரவிருத்தி யானந்தவிருத்தி யதீதராயும், கிருத கிருத்தியராயும் விளங்குவதோடு ஸ்வரூபஞானமில்லாத மூடர் மலமூத்திர பாத்திரமாயிருக்கப்பட்ட தேகமே நானென் றிந்தச் சரீரத்தைக்குறித்து வந்த ஹானிவிருத்திகளும், சாதி, வர்ணம், குலம், கோத்திரம், ஆசிரமம், நாமம், வேஷமாதிகளும், சநநமரணங்களும் நானென்றுகொண் டிருக்கிறவர்களாயும், சங்கற்ப விகற்பமாயிருக்கிற மனதை நானென்றுகொண்டிருக்கிறவர்களாயும், உசுவாசநிசுவாசமாயிருக்கின்ற பிராணவாயுவை நானென்றுகொண்

டிருக்கிறவர்களாய் ஆபாசமா யிருக்கிற சீவனே நானென்று கொண் டிருக்கிறவர்களாய்ச் சசவிசாணம்போ லிருக்கிற சூனியமே நானென்றுகொண் டிருக்கிறவர்களாய் இவைமுதலான அநேக மதஸ்தர்களும் திரிசியங்களாய்ப் பரிச்சின்னங்களாய்ச் சாவயவங்களாய் அனுர்த்தசடதுக்க ரூபங்களாய் அஞ்ஞான முதலான தேகேந்திரிய பிராண புத்தியே நானென்றுகொண் டிருக்கிறவர்களாய் லோக காமியா யிருக்கப்பட்ட சீவனே நானென்றுகொண்டு கிஞ்சிஞ்ஞர்களாயு மிருக்கிறபேர்கள்கூட நிமீரதுகமாய் சற்குருவினுடைய வீக்ஷணத்துக்குப் பாத்திரமானுர்களாகில் அவ்வீட்சணநிசயத்தினுற் சர்வகன்மவிமுத்தர்களாய் அவர்களிடத்திற் சேருவார்கள். அப்படிச் சேர்ந்தவர்களுடைய பாவங்களும், ஜநநமரணரூபங்களா யிருக்கிற சகல பிராந்திகளும், சூனியம்பண்ணித் தங்களைப்போலக் கிருதகிருத்தியர்களாய்ப் பண்ணுகிறவராயு மிருப்பரென்க.

சுலோகம்.

பஹவோகுரவஃஸந்திஸிஷ்யவித்தாபஹாரகாஃ
துர்லபோயங்குருர்தேவஸிஷ்யஹ்ருத்தாபஹாரகஃ. (௫)

இதனதுபொருள்.

சீடனது கைப்பொருள் பறிக்கும்படியான வாசாரியர் வெகுபேருண்டு. அச்சீடனது மனத்தின்கண்ணுள்ள துன்பத்தைப் பரிக்கும்படியான வாசாரியர் கிடைப்பதறிது.

இப்படிக்குச் சாஸ்திரங்களிற் பிரமாணங்க ளிருக்கிறபடியினுலு மிங்ஙனங் கிடைப்பதற்கரிய சற்குருவினிடத்தினவசிய மிகவும் விசுவாசம் வைக்கவேண்டியது சித்தம்.

இப்படியே வேதாந்தசாஸ்திரத்தி னிடத்திலு மவசியம் விசுவாசம் பண்ணவேண்டியது. ஏன் பண்ணவேண்டியதென்றால், வேதாந்த சாஸ்திரங்களிலு மகா மகிமைகளிருக்கின்றபடியால், அம் மகிமை யென்னவென்றால், அவ் வேதாந்தசாஸ்திரங்கள் சகல பிராந்திகளையுஞ் சூனியம் பண்ணுகிறதாகியும், ஜநநமரணமென்கிற சம்சார சாகரந் தாண்டுகிறதற்குத் தெப்பமாகியும், ஸ்வகர்ம குணசால மென்கிற மேகங்களைப் போக்கடிக்கிற பிரசண்ட வாயுவாகியும், ஆதியாத்மீக ஆதிபவுதீக ஆதிதெய்வீக மென்கிற தாபத்திரயாக்கினிகளைச் சாந்திபண்ணுகிற அமிர்தவருஷமாகியும், புத்திர மித்திர களத்திர பசுப்பிரத்தியக்கிரகக்கிராம க்ஷேத்திர தன தானியாதிகளிடத்திற் பிரியமோதப் பிரமோதமா யிருக்கின்ற வஞ்ஞானமான மோகாந்தகாரத்தைப் போக்கடிக்கிற சூரியப் பிரகாசமாகியும், தானத்திரய சங்கத்திரய பந்தத்திரய சீவத்திரய சக்தித்திரய விந்துத்திரய தெய்வத்திரய ஈஷணத்திரய கர்மத்திரய காரணத்திரய வாசனாத்திரயமான விவ்விலங்குகளைப் பேதிக்கிற வச்சிராயுதமாகியும், இதரமான சப்த மீமாம்ச மந்திர கர்ம யோக நியாய மிவை முதலான சாத்திரங்கள் படித்துஞ் சுக துக்க மோக கர்ம பந்த சநந மரணங்களை நிரசனம் பண்ணமாட்டாமற் சமுசயங்களோடுகூடியநேக மயக்கங்களினான் மோட்சமாகிற கரையைக் காணாமலுமிருக்கிறபேர்கள்கூட தெய்வாதீனமாய் வேதாந்தசாத்திர சிரவணம்பண்ணினா லது சகல சமுசயங்களையுஞ் சகல பய துக்க மோகாதிகளையுந் தள்ளி மோட்ச கதியைக் காண்பிக்

கிறதா யிருக்கிறபடியினாலு மிந்த வேதாந்த சாத்திரங்களின் பேரில் மிகவும் விசுவாசம்பண்ணவேண்டியது சித்தம்.

இப்படியே ஈஸ்வரனிடத்திலு மவசியம் பத்தி பண்ணவேண்டியது. ஏன் பண்ணவேண்டியதென்றால், சகலத்திற்கும் காரணராயும்; பாவமும், கர்மமும், நாமமும், ரூபமும், குணங்களு மில்லாமல் உற்பத்தி, ஸ்திதி, லயம் பண்ணுகிற நிமித்தம் மாயையினாற் சீவசகத்துக்களை விஸ்தரிக்கிறவராயும், அச்சீவ சகத்துக்களி லனுசூதராயும்; அவ்யாகிருத, இரணிய கர்ப்ப, விராட்டு, பிர்மா, விஷ்ணு, மகேஸ்வர, ராம, கிருஷ்ணாதி யவதாரராயும், சத்குரு ரூபங்களாயு மிருக்கின்றபடியினா லந்த ஈஸ்வரனைக்குறித்துச் சிரத்தாபத்தியோடும் உபாசனை பண்ணினா லதனா லீஸ்வரானுக்கிரக முண்டா யவ்வனுக்கிரகத்தினாற் சகல பாவங்களும் நசித்து மோக்ஷத்தை யடைகிறார்களாதலால் ஈஸ்வரனிடத்தி லவசியம் பத்திபண்ணவேண்டியது சித்தம்.

இப்படிக் குரு வேதாந்தவாக்கிய மீஸ்வரனிடத்தில் மிகவும் விசுவாசம் பண்ணுமற்போனால் ஜனன மரணப் பிரவாக ரூபமான சம்சாரதுக்கமென்கிற நரகந் தப்பாமலும், வருவதோடும் அஞ்ஞானமும், அவிவேகமும், அபிமானமும், இராக கர்ம சரீர துக்க பயாதிகளு மிவை முதலான சகல பிராந்திகளுஞ் சூனியமாகாமலு மிருக்கின்றபடியினா லவசியம் சற்குரு வேதாந்தவாக்கிய மீஸ்வர னிவர்களிடத்தில் மிகவுஞ் சிரத்தாபத்தி பண்ணவேண்டியது சித்தம்.

இங்ஙனம் சமதமாதி குணங்களையுடைய சமாதி சட்க சம்பத்தியான மூன்றாஞ் சாதனங் கைவந்தாற் போதாதோ வென்றாற் போதாது. ஏன் போதாதென்றால், சிலர், தாம் ஞானியெனவும், யோகியெனவும், குருக்களெனவும், பாரம்பரியமான பெரியோர்கள் வம்சத்திற் பிறந்தவரெனவுஞ் சொல்லிக்கொண்டு, முன்னுள்ள மகான்கள்பேரை வைத்துக்கொண்டு, அவர்கள் மகாமகிமையுள்ள குணாதிசயங்கள் தங்களுக் கிருக்கிறதுபோலச் சமதமாதிகளை வரவழைத்துக்கொண்டு நிர்வியாஜமாகச் சாந்தாதி குணங்களையுடைந்து மோக்ஷமெப்போது வருமென்கிற விசாரமில்லாமற் சோம்பல், மயக்கம், சமுசயம் இவைகளையுடையவராய்த் தேக சவுக்கியத்துக்காக வதற்குத் தகுந்த புசிப்பின் மிகவும் விருப்பமுள்ளவராய் விசித்திரமார்க்கங்களை யப்பியாசித்துக்கொண்டு ஞானம்போலச் சிலவார்த்தைகளைக் கற்றுக்கொண்டு ஆத்மானந்தத்தை யடையாமல் மூடசிரோமணியா யிருப்பார்களாதலால் நான்காஞ் சாதனமான முமுட்சுத்துவமு மவசியஞ் சம்பாதிக்க வேண்டியது. அஃதாவது மோக்ஷ விருப்பமாம். அதையும் நிரூபிக்கிறோம்.

ஜனனமரணப்பிரவாகரூபமான சமுத்திரத்திலிருக்கிறபோர் தாபத்திரயங்களி லடிபட் டிந்தச் சம்சாரம் மகா ரவுரவாதி நரகத்தைக் காட்டிலு மதிக துக்கமாயிருக்கிறபடியினா லிந் சம்சாரத்தில் க்ஷணமாத்திரமாகிலு மிருக்கலாகாதென்று மகாபயத்தை யடைந்திப்படிப்பட்ட கோரமான சம்சாரபய துக்க மோகப் பிரமைகளைப் போக்கடித்து நித்த சுத்த புத்த

முத்த சத்திய பரமானந்தாத்துவித சுகஸ்வரூபமா யிருக்கப் பட்ட சாம்பிராச்சியத்தை எந்தப்பெரியோர்களா லடைய லாகுமோ, அப்படிப்பட்ட சற்குரு வெங்கே யிருக்கிறரோ, இதற்கென்ன சாதனங்கள் வேண்டுமோவென்கிற விசாரத் தோடுந் தலையினெருப்புப் பற்றினவனுக்கும் நாக்கு வரண்டு போனவனுக்குந் தண்ணீரைக்கண்டாலொழிய ஒருகாரியத் திலு மனது மீளாததுபோல எப்போது மோக்ஷம் வரப் போகிறதென்றெடுத்த விடாய்தீராமற் கிருதகிருத்தியனுமள வும் விசாரத்தினுற் றவித்துக்கொண்டிருக்கிறதே முமூட்சுத் துவமென்று சொல்லப்படும்.

இந்தமுமூட்சுத்துவ மில்லாவிட்டாற்ஜநநமரணமென்கிற நரகம்விடாது. பந்தமும் போகா தானபடியினு லெவ்விதத் தினு முமூட்சுத்துவஞ் சம்பாதிக்கவேண்டியது சித்தம்.

இச் சாதனங்களுள்ளவனே பிரமவிசாரத்துக் கதிகாரி யாவன். அவ்விசாரமாவது சட மின்னதென்றறிந்து அதை நீக்கிச் சத்தையறிகிறதற்குச் சற்குருதரிசனமா யவரிடத்தின் மகாவாக்கிய உபதேசம் பெற்றுக்கொண்டு வேதாந்த மகா வாக்கியார்த்த நிச்சயமான சீவபர வாக்கியத்தை நன்றாக விசாரித் தவைகளொன்றுன வனுபவமுண்டாக விசாரிப்பதே விசாரணையாம்.

அஃது வேண்டுமென்பதற்குத் திட்டாந்தம். பசிக் கன்னம் வேண்டினவனுக் கதற்குச் சாதனமான இடம் விறகு பாத்திரம் ஜலம் அரிசி இவைக ளிருக்கினும் பசியைப்

போக்கடிக்கமாட்டாது. இவைகளுடனே அக்கினி யொன்று கூடினு லவ்வரிசியை யன்னமாகப் பாகம்பண்ணி யச் சாதனங் களுடனே தானும் நட்டமர்ய்ச் சாடராக்கினி ரூபமா யிருந்து கொண்டு முன் பாகம் பண்ணின வன்னத்தைப் புசித்துப் பசி நீங்கி யச்சாடராக்கினியுந் திருத்தியாகாரமா யெப்படிச் சுகமா யிற்றோ, அப்படியே ஆத்ம விசாரமென்னு மக்கினி பிறந்து குருவென்கிற விடத்தில் வியாபித்து வேதாந்த சாத்திர மென் கிற விறகினுற் பிரகாசித்து மானிட சன்மமென்கிற பாத்தி ரத்திற் சாந்தகுணமென்கிற சலத்திற் சையோகமாய் அறி வென்கிற அரிசியைப் பாகம்பண்ணி அவ்விசாராக்கினியு முன் னுள்ள சாதனங்களோடு நஷ்டமாய்த் தான் சமைத்த பூரண மான வன்னத்தைப் புசித்து ஜநந மரணமென்கிற துக்கமான பசிநீங்கித் தனக்கெதிரிலாத வத்துவிதானந்த திருப்தியை யடைந் தத்திருப்தியினுற் சலத்தி லுண்டான வுப்புச் சலா காரமாவதுபோல ஞானனந்தத்தி லுண்டான விசாரமும் ஞானனந்தாகாரமாய் மோட்சமடையவேண்டுமாதலா லச் சாதன சதுஷ்டயமுள்ளவர்க் கிவ்விசார மவசியம் பண்ண வேண்டியது சித்தம்.

சாதனசதுஷ்டயப்பிரகரணம்

சம்பூரணம்.

மூன்றாவது

தூலப்பிரகரணம்.

முற்பிரகரணத்திற் சித்தசுத்திக்குச் சுதந்தரமான சாதன சதுஷ்டயத்தினாற் றிரிசியமான பிரபஞ்சமனைத்தும் அநித்தியமெனவும், திருக்குரூபமான பிரமம் நித்தியமெனவும் அறிவித் தவ்வனித்தியத்தை நீக்கி நித்தியத்தை யடைவதற் கேதுவான குணங்களோடு முத்தி விருப்பத்தை வருவித்துப் பின் னிப்பூதபவுதிகமான பிரபஞ்சமுண்டான கற்பனைகளைத் தெரிவித் தவைகளை நீக்குதற்பொருட்டு முன்பு தூலப்பிரகரணம் நிரூபிக்கிறார்.

சுலோகம்.

ம்ருகத்ருஷ்ணாயாமுதகம்சுக்தௌரஜதம்புஜங்கமோரஜ்வாம்
மயிலஸதிசந்த்ரயுகவத்ப்ராந்த்யாநிகிலம்ஜகத்ரூபம். (சா)

இதனது பொருள்.

கானலினிடத்திற் சலம்போலவும், கிளிஞ்சலினிடத்தில் வெள்ளிபோலவும், பழுதையினிடத்திற் பாம்புபோலவும், சந்திரனிடத்திற் றுவைத்தியம் போலவும் என்னிடத்திற் சகல பிரபஞ்சமும் பிராந்தமாகக் காண்கிறது. இங்ஙன மிருக்கிறபடியால், மருமரீசிகையினிடத்திற் ஜலப்பிராந்தி யெப்படியோ, சுத்தியினிடத்தில் இரசிதப்பிராந்தி யெப்படியோ, இரச்சுவினிடத்திற் சர்ப்பப்பிராந்தி யெப்படியோ, சந்திர

னிடத்திற் றுவிதப்பிராந்தி யெப்படியோ அப்படியே நிட்பிரபஞ்சஸ்வரூபமான தன்னிடத்தின் மூலப்பிரகிருதி மகதத்துவம், அகங்காரதத்துவம், பஞ்சதன்மாத்திரை, சூட்சுமம், தூலம் இவை முதலான சகத்பிராந்தி தோன்றுகிறது. இந்தச் சகத்பிராந்தி யாதினாற் றோற்றுகிறதென்றால், அதிஷ்டானஞ் ஞானத்தினாற் றோற்றுகிறது. இப்படித் தோற்றுகிற சகத்பிராந்தி மருமரீசிகையினிடத்திற் சலங் காலத்திரயத்திலு மெப்படியில்லையோ, சுத்தியினிடத்தில் வெள்ளி காலத்திரயத்திலு மெப்படி யில்லையோ, இரச்சுவினிடத்திற் சர்ப்பங் காலத்திரயத்திலு மெப்படி யில்லையோ, சந்திரனிடத்திற் றுவிதங் காலத்திரயத்திலு மெப்படியில்லையோ அப்படியே நிட்பிரபஞ்ச ஸ்வரூபமான தன்னிடத்தி லதிட்டானஞ் ஞானமென்கின்ற மூலப்பிரகிருதி, மகதத்துவம், அகங்கார தத்துவம், பஞ்சதன்மாத்திரை சூட்சுமம், தூலமாகியான சகத்பிராந்தி காலத்திரயத்திலு மில்லவேயில்லை. அஃதில்லாமற் போவது மெப்படியென்றாற் கிரமமாகச் சொல்லுகிறோம்.

சுலோகம்.

ஸச்சிதாநந்தஸ்வரூபேஸ்வாத்மந்யாரோபிதம்வபு:
ஸ்தூலம்தஸ்யஸ்வரூபம்துதாவத்தத்ரநிரூப்யதே. (எ)

இதனது பொருள்.

சச்சிதானந்த ஸ்வரூபமான தன்னிடத்தில் தூல சரீரம் ஆரோபிக்கப்பட் டிருக்கிறது. அதனது ஸ்வரூபமானது நிரூபிக்கப்படுகிறது.

சுலோகம்.

அஸ்திமாம்ஸத்வசோநாடீரோமசைவயதாததா
க்ஷிதிஃபஞ்சவிதாஃப்ரோக்தாஃஸமாம்ஸாஃபரிகீர்திதாஃ. (௨)

இதனதுபொருள்.

அஸ்தி மாம்சம் சர்மம் நரம்பு உரோமம் ஆகப் பிருதிவி யம்சம் ஐந்து.

இதற்கு விபரம்.

பிருதிவியினிடத்திற் பிருதிவி அஸ்தி, பிருதிவியினிடத்தி லப்பு மாமிசம், பிருதிவியினிடத்தி லக்கினி சர்மம், பிருதிவியினிடத்தில் வாயு நரம்புகள், பிருதிவியினிடத்தி லாகாசம் உரோமங்கள். இந்த வைந்தும் பிருதிவியின் கூறு.

சுலோகம்.

லாலாமாத்ரம்ததாஸ்வேதஃஸுக்லம்ஸோணிதமேவச
ஆபஃபஞ்சவிதாஃப்ரோக்தாஃஸமாம்ஸாஃபரிகீர்திதாஃ. (௩)

இதனதுபொருள்.

வாய்நீர், மூத்திரம், வியர்வை, உதிரம், சுக்கிலம் ஆக அப்புவி னம்சம் ஐந்து.

இதற்கு விபரம்.

அப்புவினிடத்திற் பிருதிவி வாய்நீர், அப்புவினிடத்தி லப்பு மூத்திரம், அப்புவினிடத்தி லக்கினி வியர்வை, அப்புவினிடத்தில் வாயு உதிரத்தம், அப்புவினிடத்தி லாகாசஞ் சுக்கிலம். இந்த வைந்தும் அப்புவின் கூறு.

சுலோகம்.

க்ஷுடாத்ருஷ்ணாததாநித்ராஆலஸ்யம்ஸங்கமஸ்ததா
அக்நிஃபஞ்சவிதஃப்ரோக்தஸ்ஸமாம்ஸாஃபரிகீர்திதாஃ. (க0)

இதனதுபொருள்.

பசி, தாகம், நித்திரை, சோம்பல், சங்கமம் ஆக அக்கினியினம்சம் ஐந்து.

இதற்கு விபரம்.

அக்கினியினிடத்திற் பிருதிவி பசி, அக்கினியினிடத்திலப்பு தாகம், அக்கினியினிடத்திலக்கினி நித்திரை, அக்கினியினிடத்தில் வாயு ஆலஸ்யம், அக்கினியினிடத்திலாகாசஞ் சங்கமம். இந்த வைந்து மக்கினியின் கூறு.

சுலோகம்.

தாவநம்வல்கநம்சைவகுஞ்சநம்சப்ரஸாரணம்
வாயுஃபஞ்சவிதஃப்ரோக்தஃஸமாம்ஸாஃபரிகீர்திதாஃ. (கக)

இதனதுபொருள்.

ஓடுதல், சுருங்குதல், குறுகுதல், விரிகுதல், கிடத்தல் ஆக வாயுவினம்சம் ஐந்து.

இதற்கு விபரம்.

வாயுவினிடத்திற் பிருதிவி கிடத்தல், வாயுவினிடத்திலப்பு நடத்தல், வாயுவினிடத்திலக்கினி பிருத்தல், வாயுவினிடத்தில் வாயு வோடல், வாயுவினிடத்திலாகாசந் தத்தல். இந்த வைந்தும் வாயுவின் கூறு.

சுலோகம்.

ராகத்வேஷபயம்லஜ்ஜாமோஹஸ்சைவயதாததா
நபஃபஞ்சவிதம்ப்ரோக்தம்ஸமாம்ஸாஃபரிகீர்திதாஃ. (கஉ)

இதனநுபொருள்.

இராகம், துவேஷம், பயம், வெட்கம், மோகம், ஆக வாகாசாம்சம் ஐந்து.

இதற்கு விபரம்.

ஆகாசத்தினிடத்திற்பிருதிவி ஆசை, ஆகாசத்தினிடத்தி லப்பு துவேஷம், ஆகாசத்தினிடத்தி லக்கினி பயம், ஆகாசத்தினிடத்தில் வாயு வெட்கம், ஆகாசத்தினிடத்தி லாகாசம் மோகம். இந்த வைந்து மாகாசத்தின் கூறு.

ஆக விந்த விருபத்தைந்து தத்துவங்களுங் கூடித் தூல சரீரமாம். இவை யுண்டானவியரஞ் சொல்லப்பட்டது.

இந்தத் தூலசரீரத்தினிடத்தி லிந்திரியங்க ளிருக்கிற வவயவ ஸ்தானங்களின் விபரம்:—பிருதிவியினிடத்தி லாகாசமாங்காரம், ஸ்தான மிருதயம். பிருதிவியினிடத்தில் வாயு பிராணவாயு, ஸ்தான மிருதயம். பிருதிவியினிடத்தி லக்கினி கிராணேந்திரியம், ஸ்தானம் நாசி. பிருதிவியினிடத்தி லப்பு கந்ததன்மாத்திரை. பிருதிவியினிடத்திற் பிருதிவி குதேந்திரியம், ஸ்தானம் குதம்.

சுலோகம்.

அஹஞ்சப்ராணவாயுஸ்சநாஸிகாகுதமேவச
டாயு பஞ்சவிதஃப்ரோக்தஇத்யேதத்பூதபஞ்சகம். (கரு)

இதனதுபொருள்.

இந்த அகங்காரம், பிராணவாயு, சிரோத்திரியம், கந்த விஷயம், குதேந்திரியம் ஆக வைந்தும் பிருதிவி பஞ்சீகிருதி.

அப்புவினிடத்தி லாகாசஞ் சித்தம், ஸ்தானம் நாபி. அப்புவினிடத்தில் வாயு அபானவாயு, ஸ்தானங் குதம். அப்புவினிடத்தி லக்கினி சிகுவை யிந்திரியம், ஸ்தானஞ் சிகுவை. அப்புவினிடத்தி லப்பு ரசதன்மாத்திரை. அப்புவினிடத்திற் பிருதிவி குய்யேந்திரியம், ஸ்தானம் குய்யம்.

சுலோகம்.

சித்தஞ்சாபாநவாயுஶ்சஜிஹ்வாரஸநமேவச
குஹ்யம்பஞ்சவிதம்ப்ரோக்தமித்யேதஜ்ஜலபஞ்சகம். (கச)

இதனதுபொருள்.

இந்தச் சித்தம், அபானவாயு, சிகுவை யிந்திரியம், இரச விஷயம், குய்யேந்திரியம் ஆக வைந்தும் அப்புபஞ்சீகிருதி.

அக்கினியினிடத்தி லாகாசம் புத்தி, ஸ்தானம் நேத்திரம். அக்கினியினிடத்தில் வாயு உதானவாயு, ஸ்தானங் கண்டம். அக்கினியினிடத்தி லக்கினி நேத்திரேந்திரியம், ஸ்தானம் நேத்திரம். அக்கினியினிடத்தி லப்பு ரூபதன்மாத்திரை. அக்கினியினிடத்திற் பிருதிவி பாதேந்திரியம், ஸ்தானம் பாதம்.

சுலோகம்.

புத்திர்வோதாநவாயுஶ்சநேத்ரம்ரூபம்ததைவச
பாணிப்பஞ்சவிதப்ரோக்தமித்யேதத்வஹ்நிபஞ்சகம். (கரு)

இதனதுபொருள்.

இந்தப் புத்தி, உதானவாயு, நேத்திரேந்திரியம், ரூபவிஷயம், பாதேந்திரியம் ஆக வைந்தும் அக்கினி பஞ்சீகிருதி.

வாயுவினிடத்தி லாகாசம் மனது, ஸ்தானங் கண்டம். வாயுவினிடத்தில் வாயு வியானவாயு, ஸ்தானம் சர்வசரீரம். வாயுவினிடத்தி லக்கினி தொக்கேந்திரியம், ஸ்தானந் தொக்கு. வாயுவினிடத்தி லப்பு பரிசதன்மாத்திரை. வாயுவினிடத்திற் பிருதிவி பாணீந்திரியம், ஸ்தானம் அஸ்தம்.

சுலோகம்.

மாநஸம்வ்யாநவாயுஶ்சசர்மஸ்பர்ஶஸ்ததைவச
பாதஃபஞ்சவிதஃப்ரோக்தஇத்யேதத்வாயுபஞ்சகம். (௧௬)

இதனதுபொருள்.

இந்த மனது, வியானவாயு, தொக்கேந்திரியம், பரிசவிஷயம், பாணீந்திரியம் ஆக விந்தவைந்தும் வாயு பஞ்சீகிருதி.

ஆகாசத்தினிடத்தி லாகாசம் ஞானம், ஸ்தானம் புருவமத்தியம். ஆகாசத்தினிடத்தில் வாயு சமானவாயு, ஸ்தானம் நாபி. ஆகாசத்தினிடத்தி லக்கினி சுரோத்திரேந்திரியம், ஸ்தானஞ் செவி. ஆகாசத்தினிடத்தி லப்பு சத்ததன்மாத்திரை, ஆகாசத்தினிடத்திற் பிருதிவி வாக்கிந்திரியம், ஸ்தானம் வாக்கு.

சுலோகம்.

ஜ்ஞாநம்ஸமாநவாயுஶ்சஶ்ரோத்ரம்ஶப்தஸ்ததைவச
வாக்பஞ்சவிதஃப்ரோக்தஇத்யேதத்வ்யோமபஞ்சகம். (௧௭)

இதனதுபொருள்.

இந்த ஞானம், சமானவாயு, சுரோத்திரேந்திரியம், சத்த விஷயம், வாக்கிந்திரியம் ஆக விந்த வைந்தும் ஆகாச பஞ்சீகிருதி.

இந்த விந்திரியங்க ளிருக்கிற ஸ்தானமான தூலசரீரம் பஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களினுலானது. இதற்குச் சம்மதி வசனம்.

சுலோகம்.

பஞ்சீக்ருதமஹாபூதஸம்பவம்கர்மஸஞ்சிதம்
ஶரீரம்ஸுகதுஃகாநாம்போகாயதநமுச்யதே. (கஅ)

இதனதுபொருள்.

பஞ்சீகிருத பஞ்சமகா பூதத்தினின்று முண்டாகியும், கர்மசஞ்சிதமாயும், சுக துக்கங்களுக் கிடமாயு மிருக்கின்றது தூலசரீரமென் ருசாரியசுவாமிக ளாத்மபோதமென்கிற கிரந்தத்தி னிரூபித்திருக்கிரு ரானபடியினுலு மிவ்வாறு சுருதிகளிற் சொல்லப்பட்டிருக்கிறபடியினுலு மிதுவே பிரமாணம்,

தன்னிடத்தி லத்தியஸ்தமாய்த் தோற்றுகிற விந்தப் பஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களினுற் கற்பிதமான வித் தூல சரீரந் தானல்ல. அஃதெப்படித் தானல்லவென்ருல், இந்த அஸ்தி, மாமிசம், சருமம், நரம்பு, உரோமம் இந்த வைந்தையு மறிந்த வறிவே தான். தன்னுலறியப்பட்ட விந்த வைந்துந் தன்னை யறியமாட்டா; ஆகையாற் சடம். இந்த வைந்துந் தானல்ல; இந்த வைந்தும் பிருதிவியினம்சமாம். இந்த வைந்தி

னுடைய ஹானிவிருத்திகளினால் வருகிற சுக துக்கங்கள் தனக்கில்லை. இந்த வைந்துமே தானானா லிந்த வைந்தும்போனாற் றான் போகவேண்டும். இந்த வைந்தும் போனாலுந் தான் போகவில்லை. ஆகையா லிவ் வைந்துக்குஞ் சாட்சியா யறிகிற வறிவே தான்.

இப்படியே வாய்மீர், மூத்திரம், வியர்வை, உதிரம், சுக்கிலம் இந்த வைந்தையு மறிந்த வறிவே தான். தன்னாலறியப் பட்ட விந்த வைந்துந் தன்னை யறியமாட்டா; ஆகையால் அவை சடம். இவ் வைந்துந் தானல்ல; இந்த வைந்தும் அப்புவி னம்சமாம். இந்த வைந்தினுடைய ஹானி விருத்திகளினால் வருகிற சுகதுக்கங்கள் தனக்கில்லை. இவ் வைந்துமே தானானால், இந்த வைந்தும் போனால் தான் போகவேண்டும். இந்த வைந்தும் போனாலுந் தான் போகவில்லை, ஆகையா லிந்த வைந்துக்குஞ் சாட்சியா யறிகிற வறிவே தான்.

இப்படியே பசி, தாகம், நித்திரை, ஆலஸ்யம், சங்கமம் இந்த வைந்தையு மறிந்த வறிவே தான், தன்னாலறியப்பட்ட விந்த வைந்துந் தன்னை யறியமாட்டா வாகையாற் சடம்.

இந்த வைந்துந் தானல்ல. இந்தவைந்து மக்கினியி னம்சமாம். இந்த வைந்தினுடைய ஹானிவிருத்திகளினால் வருகிற சுகதுக்கங்கள் தனக்கில்லை, இந்த வைந்துமே தானானா லிந்த வைந்தும் போனால் தான் போகவேண்டும், இந்த வைந்தும் போனாலுந் தான் போகவில்லை. ஆகையா லிந்த வைந்துக்குஞ் சாட்சியா யறிகிற வறிவே தான்.

இப்படியே கிடத்தல், நடத்தல், இருத்தல், ஓடல், தத்தல் இந்த வைந்தையு மறிந்த வறிவே தான். தன்னு லறியப்பட்ட விந்த வைந்துந் தன்னை யறியமாட்டா; ஆகையாற் சடம். இந்த வைந்துந் தானல்ல. இந்த வைந்தும் வாயுவினபஞ்சமாம். இந்த வைந்தினுடைய ஹானிவிருத்திகளினுல் வருகிற சுகதுக்கங்கள் தனக்கில்லை. இந்தவைந்துந் தானுனு லிந்த வைந்தும் போனுல் தான் போகவேண்டும். இந்த வைந்தும் போனுலுந் தான் போகவில்லை. ஆனபடியினு லிந்த வைந்துக்குஞ் சாட்சியா யறிகிற வறிவே தான்.

இப்படியே ஆசை, துவேஷம், பயம், வெட்கம், மோகம் இந்த வைந்தையு மறிந்த வறிவே தான். தன்னுலறியப்பட்ட விந்த வைந்துந் தன்னை யறியமாட்டா; ஆகையாற் சடம். இந்தவைந்துந் தானல்ல. இந்தவைந்து மாகாசத்தி னைஞ்சமாம்.

இந்த வைந்தினுடைய ஹானிவிருத்திகளினுல் வருகிற சுகதுக்கங்கள் தனக்கில்லை. இந்தவைந்துந் தானுனு லிந்தவைந்தும் போனுல் தான் போகவேண்டும். இந்தவைந்தும் போனுலுந் தான் போகவில்லை. ஆனபடியா லிந்த வைந்துக்குஞ் சாட்சியா யறிகிற வறிவே தான்.

இந்தப் பிருதிவிபஞ்சகமும், அப்புபஞ்சகமும், அக்கினி பஞ்சகமும், வாயுபஞ்சகமும், ஆகாச பஞ்சகமுமாகிய விவ் வைந்து பஞ்சகங்களுங்கூடி தூலசரீரமாயிற்று.

இந்தத் தூலசரீரமென் றறிந்த வறிவே தான். தன்னுலறியப்பட்ட விந்தத் தூலசரீரந் தன்னை யறியமாட்டா வாகையாற்

சடம். இந்த தூலசரீரந் தானல்ல. இந்தத் தூலசரீரம் பஞ்சீ கிருத பஞ்சமகா பூதங்களினு லானது. இந்தத் தூலசரீரத்தி னுடைய ஹானிவிருத்திகளினுல் வருகிற சுகதுக்கங்கள் தனக் கில்லை. இந்தத் தூலசரீரமே தானுனு லிந்தத் தூலசரீரம்போ னுல் தான் போகவேண்டுமே? இந்தத் தூலசரீரம்போனுலுந் தான் போகவில்லையே? எப்படித் தான் போகவில்லையென் னிற் பூருவத்திற் முன் சரீரத்தோடு மிருந்து பண்ணின தரு மத்தினுற் றனக்கிந்தச் சரீரம்வந்ததென்றும், இந்தச் சரீரத்தி னுற் பண்ணின கருமத்தினுற் றனக்கினிமேற் சரீரம் வரப் போகிறதென்று மிந்தச் சரீரத்திற்கு விலட்சணமான தன்னை யறிந்தாற் றனக்கினிமேற் சரீரம் வராதென்று மனுபவமிருக் கிறபடியாற் பூதபவுஷிய வர்த்தமானகாலத்திரயங்களிலு மிந் தச் சரீரமிருந்தாலும் போனுலுந் தான் போகவில்லை. ஆன படியினு லிந்த வியஷ்டி தூலசரீரந் தானல்ல. இந்தவியஷ்டி தூலசரீரத்துக்குச் சாட்சியா யறிகிற வறிவே தான். இதற்குச் சம்மதிவசனம்.

சுலோகம்.

நத்வேவாஹம்ஜாதுநாஸம்நத்வம்நேமேஜநாதிபா:
நசைவநபவிஷ்யாமஸ்ஸர்வேவயமத:பரம். (௧௬)

இதனதுபொருள்.

நானொருக்காலு மிராமலிருந்தவனல்ல, நீயு மிராமலிருந் தவனல்ல, இந்த விராசாக்களு மிராமலிருந்தவர்களல்ல, நா மெல்லோருமே யில்லாமற் போகிறவர்களு மல்லவென்று கீதையிற் பகவா னிரூபித்திருக்கிறுர்.

சுலோகம்.

கடத்ரஷ்டாகடாத்பிந்நஃஸர்வதாநகடோயதா
தேஹத்ரஷ்டாததாதேஹோநாஹமித்யவதாரய. (உ௦)

இதனதுபொருள்.

கடத்தைகாண்கிறவன் கடத்துக்கு வேறாய்க் கடமாகா ததுபோலத் தேகத்தைக் காண்கிறதாலுந் தேகமல்லவென் றறிக என் றுசாரிய சுவாமிகள் வாக்கியவிருத்தியென்கிற கிரந் தத்தி னிருபித்திருக்கிற ரானபடியினு லிதுவே பிரமாண சித் தம்.

இந்த வியஷ்டி தூலசரீரத்துக்குச் சாட்சியான தானே பிர்மாதி பிபீலிகாந்தமான சமஷ்டி தூலசரீரங்களிலும் பஞ்சீ கிருத பஞ்சமகா பூதங்களென்கிற தூலபூதங்களிலு மனு சூதமா யிருந்துகொண்டு காட்சியா யறிகிறபடியினு லிந்தச் சமஷ்டி தூலசரீரங்களுக்குக் காரணமான பஞ்சீகிருத பஞ்ச மகாபூதங்களென்கிற தூலபூதங்களுந் தானல்ல. எப்படித் தானல்லவென்னிற் றனக்கெதிரே தோற்றுகிற சமஷ்டி விய ஷ்டி யாத்மகமான தூலசரீரங்க ளிடத்திலும், இதற்குக்காரண மான பஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களென்கிற தூலபூதங்க ளிடத்திலும் அத்தியஸ்தமாய்த் தோற்றுகிற விசுவன் வியாவ் காரிகனும் விராட்டு வைஸ்வானரனு மென்கின்ற வபிமான நாமங்களும், சாக்கிராவஸ்தையும், நேத்திரஸ்தானமும், யுத்தபோகமும், அகாரமாத்திரையும், இரசோகுணமும், கிரியாசத்தியும், பிரமமூர்த்தியும், அன்னமயகோசமும், சீவத் துவமும், மனுஷியத்துவமும், நர்ன் கர்ப்பஸ்தனுகப் பிறந்த

வன், நான்பாலன், நான்குமாரன், நான்யுவன், நான்விருத்தன், நான் சீரணித்துப் போகிறவனென்னு மிச் சட்பாவ விகாரங்களும்; சடாதாரமென்கிற நாமங்களும், இலட்சியத்திரயங்களென்கிற நாமங்களும்; நான் புருஷன், நான் ஸ்திரீ, நான் நபும்சகனென்கிற லிங்கத்துவமும்; நான் பிராமணன், நான் க்ஷத்திரியன், நான் வைசியன், நான் சூத்திரனென்கிற வர்ணத்துவமும்; நான் றமிழன், நான் றெலுங்கன், நான் கன்னடன், நான் மகராஷ்டகன், நான் குர்ச்சரனென்கிற பஞ்ச திராவிடங்களும்; நான் காசிப கோத்திரம், நான் பரத்வாச கோத்திரம், நான் போதாயன சூத்திரம், நான் ஆசிலாயன சூத்திரம், நான் ஆபஸ்தம்ப சூத்திரம், நான் காத்தியாயன சூத்திரமென்கிற கோத்திர சூத்திரங்களும்; நான் பிரமசாரி, நான் கிரகஸ்தன், நான் வானப்பிரஸ்தன், நான் சந்நியாசி என்கிற ஆச்சிரமங்களும்; நான் கிருஷ்ணன், நான் இராமன், நான் எல்லம்பட்டன், நான் குப்பாப்பட்டனென்கிற குறிநாமங்களும்; நான் கறுத்தவன், நான் சிவத்தவனென்கிற ரூபங்களும்; நான் தீட்சதன், நான் சோமயாகி, நான் பிருதிவி வசந்தயாகி, நான் மஹாவிரதயாகி, நான் பவுண்டரீகயாகி என்கிற சமஸ்காரநாமங்களும்; நான்மாயாவாதி, நான் தத்துவவாதி யென்கிற மத நாமங்களும்; நான் வாத்தியார், நான் கர்மடன், நான் பத்தன், நான் ஞானி, நான் கலியாணப்பிள்ளை யென்கிற வர்சாரநாமங்களும்; நான் தச்சன், நான் தட்டான், நான் கொல்லன், நான் குசவன், நான் அம்பட்டன், நான் வண்ணான், நான் இடையனென்கிற விருத்திநாமங்களும்; நான் கூலிக்காரன், நான் காஸ்தாரி, நான் மாவுத்தன், நான் மணியக்காரன், நான் கணக்கப்பிள்ளை யென்

கிற கிரியாநாமங்களுமான மனுடநாமங்களும்; பிர்மா விஷ்ணு மகேஸ்வரன் சூரியன் நட்சத்திரம் தேவ கந்தருவ சித்த சாத்திய கின்னர கிம்புருஷ குய்யக அப்ஸர வித்தியாதர யட்ச ராட்சத பூதப் பிரேத பிசாச சாகினி டாகினி வேதாளாதி தாம்பிர மிருண்மய சிலாதாரு ரூபங்களென்கிற தேவ நாமத்துவமும்; கோ இடப அசுவ கார்த்தப சிங்க சார்த்தூல சுவான மார்ச்சால மர்க்கடாதி மிருக நாமங்களும்; கருடன் மசகமாதி பட்சிநாமங்களும்; பன்னகாதி ஊர்வன நாமங்களும் மச்சக் கூர்மாதி நீர்வாழ்வன நாமங்களும், கற்பகம் மந்தாரம் பாரிசாதம் நாளிகேரம் தாளி அசுவத்தாதி விருட்ச நாமங்களும்; மகாமேரு சித்திரகூடம் திரிகூடம் சத்தகுலபர்வதாதி பர்வத நாமங்களும்; சுவர்க்க மத்திய பாதாளாதி சதுர்த்தச புவனங்களும், நவகண்டஞ் சத்ததீபங் குருக்ஷேத்திரங் காசிக்ஷேத்திரந் துவாரகாக்ஷேத்திர முதலான புண்ணிய க்ஷேத்திராதி பிருதிவி நாமங்களும்; சத்த சமுத்திரம் கங்கை யமுனை சரஸ்வதி துங்கபத்திரா கோதாவரி கிருஷ்ணை காவேரி முதலிய புண்ணிய தீர்த்தாதி சலநாமங்களும்; வடவானலம் ஆஹவானலம் காருகபத்தியம் தக்ஷணக்கினி அக்கினிஹோத்திரம் சடராக்கினி யாதியான அக்கினி நாமங்களும்; மலையமாருதம் பிரசண்டமாருதமென்கிற வாயு நாமங்களும், அசரீர அவகாச தசதிக்குப் பஞ்சாகாசம் வெளியென்கிற ஆகாச நாமங்களும், இந்தத் தூலப்பிரபஞ்சத்தைக் குறித்துச் சொல்லப்பட்ட சத்தசாஸ்திரம் தர்க்க சாத்திரம் மீமாம்ச சாஸ்திரம் யோக சாஸ்திரம் வேதாந்த சாஸ்திரங்களு மிவைமுதலான விந்த

வியஷ்டி சமஷ்டி தூலப் பிரபஞ்சத்தின்மேற் றோற்றுகிற சகல வித்தியாசங்களும், இதற் காதாரமான தூலப்பிரபஞ்சமும், சசவிஷாண வந்தியாபுத்திர ககனாரவிந்த மித்தியா புருஷன்போலவே காலத்திரயத்திலேயுந் தனக்கில்லை. அஃ தெப்படியெனில், அஸ்தி மாம்சங்களைக் குறித்துத் தூல மென்று சொல்லுவோமென்றா லவைகட்கு வெவ்வேறு நாமங்களிருக்கிற படியினாலும், அவயவங்களைக் குறித்துத் தூலங்களென்று சொல்லுவோமென்றால், அவயவங்களுக்கு வெவ்வேறு நாமங்களிருக்கிறபடியினாலும், குட்டை நெட்டையைக் குறித்துத் தூலங்களென்று சொல்லுவோ மென்றால், குட்டை நெட்டைகளுக்கு வெவ்வேறு நாமங்களிருக்கிறபடியினாலும், பஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களைக்குறித்துத் தூலங்களென்று சொல்லுவோ மென்றால், பஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களுக்கு வெவ்வேறுநாமங்க ளிருக்கிறபடியினாலும், அந்தப் பஞ்சமகாபூதங்களில் சத்ததன்மாத்திரையை வினா ஆகாசமில்லை. சத்த பரிச தன்மாத்திரையை வினா வாயுவில்லை. சத்த பரிச ரூப தன்மாத்திரையை வினா அக்கினியில்லை. சத்த பரிச ரூப ரச தன்மாத்திரையை வினா அப்புவில்லை. சத்த பரிச ரூப ரச கந்த தன்மாத்திரையை வினா பிருதிவி யில்லை. ஆனபடியினா லிந்தப் பஞ்சீகிருத பஞ்சமகாபூதங்கள் அபஞ்சீகிருதமான பஞ்சதன்மாத்திரையைத் தவிரவில்லை. ஆதலா லிந்த அபஞ்சீகிருதமான பஞ்சதன்மாத்திரைகளிடத்தி லத்தியஸ்தமானதுக் கெதிராகத்தோற்றுகிற பஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களென்கிற தூலபூதங்களு மிதனுடைய காரியமான பிரமாதி பிபீலிகாந்தமான சமஷ்டி வியஷ்டி தூலசரீரங்களும்,

இதன்மேல் அத்தியஸ்தமான நாமங்களு மிதைக் குறித்து வருகிற ஆபாசங்களும் சசவிஷாண வந்தியாபுத்திர ககனாரவிந்த மித்தியாபுருஷன்போலவே காலத்திரயத்திலுந் தனக்கில்லவேயில்லை. இதற்குச் சம்மதிவசனம்.

இத் தூலசரீரத்தின்பேரில் அத்தியஸ்தமாய்த் தோற்றுகிற பிராமணத்துவஞ் சரீரத்தைக் குறித்து சொல்லுவோமென்றால் சரீரம் க்ஷத்திரியர்களுக் கிருக்கிறபடியினாலும், குடுமி பூணூலைக் குறித்துச் சொல்லுவோ மென்றால், அக்குடுமி பூணூல் மண்ணுடையானுக் கிருக்கிறபடியினாலும், அவயவங்களைக்குறித்துச் சொல்லுவோமென்றால், அவ்வவயவங்களுக்கு வெவ்வேறு நாமங்க ளிருக்கிறபடியினாலும், தாய் தகப்பன் பிராமணனான படியினா லவர்களைக் குறித்துச் சொல்லுவோ மென்றால், தாய்தகப்பனாலுண்டான நக தந்த கேச மல மூத்திரங்களுக்கும் பிராமணத்துவம் வரவேண்டும். அப்படி வரவில்லை ஆதலா லிந்தப் பிராமணத்துவாதி நாமங்கள் பிள்ளைகள் விளையாட்டினாற் பெயர்வைத்துக்கொண்டாற்போலச் சொல்லப்பட்டதேயல்லாமற் பரமார்த்தமாகக் காலத்திரயத்திலுந் தனக்கில்லையென்று விவேகசாரமென்கிற கிரந்தத்தில் வாசுதேவ சுவாமியார் நிரூபித்திருக்கிறதும், பூபாலகா! விருட்சத்திற் றுருவுண்டாயிற்று; தாருவிற் பல்லக்குண்டாயிற்று; இதற்கு விருட்சமென் றுந் தாருவென் றும் பெயரில்லை. சனங்க ளுன்னைப் பல்லக்கிலேறி வருகிறானென் று சொல்லுவார்களை யல்லாமல் இராசா விருட்சத்தின்பேரி லேறிவருகிறு னென் றும், தாருவின்மேலேறி வருகிறானென் றும் ஒரு

வருஞ் சொல்லவில்லை. பல்லக்குத் தாருவினுற் பண்ணப் பட்டதே யல்லாமல் வேறல்ல. அந்தத் தாருவினைப் பிரத்தியேகமாய் விவகரித்துப்பார்த்தா லதற்குப் பல்லக்கென்கிற பேருண்டோவென்று விசாரியும். அதுவுமல்லாம லிந்தக் குடையிருக்கின்றதே அஃது தநேகமூங்கிற் பிளாச்சுக்களினுற் குறுக்கு நெடுக்குமாகப் போட்டுக் கட்டிக் குடையென்று சொல்லப்படுகின்றது.

இந்தப் பிளாச்சுக்களைப் பிரத்தியேகமா யெடுத்து விவகரித்துப் பார்த்தா லது குடையென்றெப்படிச் சொல்லப் படும்?

இப்படியே பஞ்சபூதங்களுடைய பரிணும விசேஷத்தினுலுன்சரீரமென்று மென்சரீர மென்றும் விவகரிக்கப் படுகிறது.

பூர்வகர்ம ஜந்நியமான தேகங்களிற் பிரவேசித்த சீவனை ஸ்திரீயென்றும் புருஷனென்றும் யானையென்றும் குதிரையென்றும் பசுவென்றும் பக்ஷியென்றும் விவகரிக்கிறுர்கள்.

இஃது இலௌகீகப் பார்வையினு லல்லாமற் பரமார்த்திகமான பார்வையில்லை. அந்த வறிவே ஸ்வரூபமான ஆத்மா யட்சராட்சதர்கள் முதலான தேவ மனுஷிய பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரஜாதிகளும், பசு பட்சியாதிக ளென்கிற நாமங்களும் ஆத்மாவுக்குக் கர்மசந்நியமே யல்லாமற் சுபாவமாயில்லை. ஆனபடியினு னிப்படிப்பட்டவனென் றெப்படிச் சொல்லப்படும்? இராஜாவென்றும் சேவகனென்றும் வன்னியனென்றும் விவகரிக்கப்படுகிற வஸ்துவெல்லாம் அசத்தென் றறியவேண்டும்.

எந்த வஸ்துவாகட்டுங் காலாந்தரத்திற் பிறவியாய்ப் பேரிடப் படுகின்றதோ, அந்த வஸ்துவுக்குச் சத்தென்று சொல்லப்படாது. நீயொருவனே தேசத்துக் கரசனென்றும், தகப்பனுக்குப் பிள்ளையென்றும், சத்துருவுக்குப் பகையாளி யென்றும், பெண்சாதிக்குப் புருஷனென்றும், குமாரனுக் குத் தகப்பனென்று மிப்படிச் சொல்லப்படுகிறபோது உன்னை யாரென்று நிச்சயிக்கலாம்? ஓ இராசாவே! நீயாவது தலையோ வயிறோ கையோ காலோ இந்த வவயவங்களுக்குப் புறம்பான சூட்சுமபுத்தியினு லுன்னையாரென்று விசாரித்துப்பார். இப் படி தத்துவநிச்சயமாயிருக்க இதரவித்தையினுலாத்மாவை இப் படிப்பட்டதென் றெப்படிச் சொல்லலா மென்று விஷ்ணு புராணத்தில் விப்பிரோத்தமரான சடபரதர் சவ்வீர மகிபால ராஜாவுக் குபதேசம்பண்ணி யிருக்கிறதும், சத்ததன்மாத்தி ரையைத்தவிர ஆகாசமில்லை, சத்த பரிச தன்மாத்திரையைத் தவிர வாயுவில்லை, சத்த பரிச ரூப தன்மாத்திரையைத் தவிர அக்கினியில்லை, சத்த பரிச ரூப ரச தன்மாத்திரையைத் தவிர அப்புவில்லை, சத்த பரிச ரூப ரச கந்த தன்மாத்திரையைத் தவிர பிருதிவியில்லை என் றாத்மாநாத்ம விவேகமென்கிற கிரந்தத்திற் சங்கராசாரிய சுவாமிகள் நிரூபித்திருக்கிறதும் பிரமாணமாம். ஆகையால் இதுவே சித்தம்.

தூலப்பிரகரணம்

சம்பூரணம்,

நான்காவது

சூட்சுமப்பிரகரணம்.

முற்பிரகரணத்திற் பஞ்சீகிருத பஞ்சமஹாபூதங்களையும், சமஷ்டி வியஷ்டி யாத்மகமான சரீரங்களையும், இதன்மேற் கற்பிதமான ஆபாசங்களையுமுடைய தூலசரீரந் தானன்றெனை நியதிபண்ணி இதற்குக் காரணமான சூட்சும சரீரமுந் தானல்லவென்று நீக்குதற்பொருட்டுத் தன் ஸ்வரூபம் நிரூபிக்கிறார்.

சுலோகம்.

ஸச்சிதாநந்தஸ்வரூபேஸ்வாத்மந்யாரோபிதம்வபுः
ஸூக்ஷ்மம்தஸ்யஸ்வரூபந்துதாவத்தத்ரநிருப்யதே. (உக)

இதனதுபொருள்.

சச்சிதானந்த ஸ்வரூபமான தன்னிடத்தி லாரோபிக்கப் பட்டது சூட்சுமசரீரம், அதன் ஸ்வரூபம் நிரூபிக்கப் படுகின்றது.

அஃதெப்படி யெனில், சத்ததன்மாத்திரை சாத்விகாம்சஞ் சமஷ்டியிற் கூடினது ஞானம். சத்ததன்மாத்திரை இரசோம்சஞ் சமஷ்டியிற்கூடினது சமானவாயு. சத்ததன்மாத்திரை வியஷ்டி சாத்விகாம்சஞ் சுரோத்திரேந்திரியம். சத்த தன்மாத்திரை விஷயம். சத்ததன்மாத்திரை வியஷ்டி ரசோம்சம் வாகிந்திரியம். இந்த ஞானம், சமானவாயு, சுரோத்திரேந்

திரியம், சத்தவிஷயம் வாகிந்திரியம். இந்த வைந்தையுஞ் சத்த தன்மாத்திரையைத் தவிரவில்லை. பரிசதன்மாத்திரை சாத்விகாம்சஞ் சமஷ்டியிற்கூடினது மனது. பரிசதன்மாத்திரை இரசோம்சஞ் சமஷ்டியிற்கூடினது வியானவாயு. பரிசதன் மாத்திரை வியஷ்டி சாத்விகாம்சந் தொக்கேந்திரியம். பரிச தன்மாத்திரை விஷயம். பரிசதன்மாத்திரை வியஷ்டி இர சோம்சம் பாணீந்திரியம். இந்த மனது, வியானவாயு, தொக் கேந்திரியம், பரிசவிஷயம், பாணீந்திரியம் இந்த வைந்தும் பரிசதன்மாத்திரையைத் தவிரவில்லை. ரூபதன்மாத்திரை சாத்விகாம்சஞ் சமஷ்டியிற் கூடினது புத்தி. ரூபதன்மாத் திரை இரசோம்சஞ் சமஷ்டியிற்கூடினது உதானவாயு. ரூப தன்மாத்திரை வியஷ்டி சாத்விகாம்சம் நேத்திரேந்திரியம். ரூபதன்மாத்திரை விஷயம். ரூபதன்மாத்திரை வியஷ்டி இர சோம்சம் பாதேந்திரியம். இந்தப்புத்தி, உதானவாயு, நேத்தி ரேந்திரியம், ரூபவிஷயம், பாதேந்திரிய மிந்தவைந்தும் ரூப தன்மாத்திரையைத் தவிரவில்லை. இரசதன்மாத்திரை சாத் விகாம்சஞ் சமஷ்டியிற்கூடினது சித்தம்.

இரசதன்மாத்திரை ரசோம்சஞ் சமஷ்டியிற் கூடினது அபானவாயு. இரசதன்மாத்திரை வியஷ்டி இரசோம்சஞ் சிகுவேந்திரியம். இரசதன்மாத்திரை விஷயம். இரசதன் மாத்திரை வியஷ்டி இரசோம்சங் குய்யேந்திரியம். இந்தச சித்தம், அபானவாயு, சிகுவேந்திரியம், ரசவிஷயம, குய்யேந் திரியம் இந்தவைந்தும் இரசதன்மாத்திரையைத் தவிரவில்லை. கந்ததன்மாத்திரை சாத்விகாம்சஞ் சமஷ்டியிற்கூடினது அகங்

காரம், கந்ததன்மாத்திரை இரசோம்சஞ் சமஷ்டியிற் கூடி னது பிராணவாயு. கந்ததன்மாத்திரை வியஷ்டி சாத்விகாம்சங் கிராணேந்திரியம். கந்ததன்மாத்திரை விஷயம். கந்த தன்மாத்திரை வியஷ்டி இரசோம்சங் குதேந்திரியம். இந்த வகங்காரம், பிராணவாயு, கிராணேந்திரியம், கந்தவிஷயம், குதேந்திரிய மிந்த வைந்துங் கந்ததன்மாத்திரையைத் தவிர வில்லை. இந்த வாக்காதி கன்மேந்திரியங்க ளைந்தும், சத்தாதி விஷயங்க ளைந்தும் சுரோத்திராதி ஞானேந்திரியங்களைந்தும், பிராணுதிவாயுக்களைந்தும் ஞானம் நீங்கலாக மனுதியந்தக் கரணங்க ளன்குமாக விந்த விருபத்துநாலுங்கூடிச் சூட்சும சரீரமாயிற்று. இதற்குச் சம்மதி வசனம்.

சுலோகம்.

பஞ்சப்ராணமனோபுத்திதசேந்த்ரியஸமந்விதம்
அபஞ்சீக்ருதபூதோத்தம்ஸூக்ஷ்மேகம்போகஸாதநம். (உஉ)

இதனதுபொருள்.

பஞ்சப்பிராணனும், மனமும், புத்தியும், ஞானேந்திரியங்களும், கன்மேந்திரியங்களும், சூட்சும சரீரமென்றுபெயர். இப்படி ஆசாரிய சுவாமிக ளாத்மபோத மென்கிற கிரந்தத்தினிருபிக்கிரு ரானபடியினு லிதுவே பிரமாணசித்தம்.

ஆனு லாசாரிய சுவாமிக ளாத்மபோதமென்கிற கிரந்தத்திற் சூட்சுமசரீரம் பதினேழு தத்துவமென்று நிருபித்திருக்க, இருபத்துநான்கு தத்துவமென் றெப்படிச் சொல்லப்படுமென்றுல், மனதிற் சித்தத்தையும், புத்தியி லாங்காரத்தையு

மடக்கிப் பஞ்ச விஷயங்களையும் நீக்கிப் பதினேழாகக் கூறினார். யாமிந்தச் சித்த மகங்கார மிவைகளின்குணம் வெவ்வேறே யிருக்கின்றபடியினா லிவ் விரண்டையுஞ் சூட்சுமசரீரத்துக்குக் காரணமான பஞ்சதன்மாத்திரைகள் விஷயரூபமாகத் தோன்றுகிறபடியினாலும், விஷயரூபமாகத் தோன்றுகிற பஞ்சதன்மாத்திரைகளைத்தவிர சூட்சுமசரீர மிராதானபடியினா லிந்த விஷயங்களைந்து, சித்தம் அகங்காரம் இரண்டு ஆக வேழையுங்கூட்டிச் சூட்சுமசரீர மிருபத்துநாலென்று சொன்னது சித்தம்.

இப்படியே தன்னிடத்தி லத்தியஸ்தமாய்த் தோற்றுகிற பஞ்சதன்மாத்திரையினாலான விந்தச் சூட்சுமசரீரந் தானல்ல. இந்தச் சூட்சுமசரீரத்தை யறிந்த ஞானமே தான். அஃதெப்படியென்னில், வாக்கு, பாணி, பாதம், குய்யம், குதங்களென்கிற கன்மேந்திரியங்களுக்கு வசன, தான, கமன, ஆனந்த, விசர்க்கமான விஷயங்களுண்டாயிருந்தாலும், இந்தச் சுரோத்திரேந்திரியஞ் சத்தவிஷயத்தினால் வாகிந்திரியத்தை யறிகிறது. தன்னா லறியப்பட்ட விந்த வாகிந்திரியந் தன்னை யறியமாட்டாதாகையாற்சடம். இந்த வாகிந்திரியந் தானல்ல. இவ்வாக்கிந்திரியஞ் சத்ததன்மாத்திரை வியஷ்டி சாத்விகாம்சத்தினாலானது. இதன் ஹானிவிருத்திகளினால் வருகிற சுகதுக்கங்க டனக்கில்லை. இந்தவாகிந்திரியந் தானானால், இந்த வாகிந்திரியம் போனாற் றான்போகவேண்டும். இந்த வாகிந்திரியம் போனாலுந் தானப்படிப் போகவில்லை. ஆகையாலிந்த வாகிந்திரியத்துக்குச் சாட்சியா யறிந்த சுரோத்திரேந்திரியமே தான். இப்

படியே தொக்கேந்திரியம் பரிசவிஷயத்தினாற் பாணீந்திரியத்துக் கறிகிறது. தன்னாலறியப்பட்ட விந்தப் பாணீந்திரியந் தன்னை யறியமாட்டா தாகையாற் சடம்.

இந்தப் பாணீந்திரியந் தானல்ல. இந்தப் பாணீந்திரியம் பரிசதன்மாத்திரை வியஷ்டி இரசோம்சத்தி னாலானது. இந்தப் பாணீந்திரியத்தினுடைய ஹானிவிருத்திகளினால் வருகிற சுகதுக்கங்க ளெனக்கில்லை. இந்தப் பாணீந்திரியமே தானானா லிந்தப் பாணீந்திரியம் போனாற் றான்போகவேண்டும். இந்தப் பாணீந்திரியம் போனாலுந் தான்போகவில்லை. ஆகையினா லிப் பாணீந்திரியத்துக்குச் சாட்சியா யறிந்த தொக்கேந்திரியமே தான். இப்படியே நேத்திரேந்திரியம் ரூபதன்மாத்திரையினாற் பாதேந்திரியத்துக் கறிகிறது. தன்னா லறியப்பட்ட பாதேந்திரியந் தன்னை யறியமாட்டா தாகையாற் சடம்.

இந்தப் பாதேந்திரியந் தானல்ல. இந்தப் பாதேந்திரியம் ரூபதன்மாத்திரை வியஷ்டி இராசோம்சத்தி னாலானது. இந்தப் பாதேந்திரியத்தினுடைய ஹானிவிருத்திகளினால் வருகிற சுகதுக்கங்க ளெனக்கில்லை. இந்தப் பாதேந்திரியமே தானானா லிந்தப் பாதேந்திரியம் போனாற் றான் போகவேண்டும். இந்தப் பாதேந்திரியம் போனாலுந் தான்போகவில்லை. ஆனபடியினா லிந்தப் பாதேந்திரியத்துக்குச் சாட்சியா யறிந்த நேத்திரேந்திரியமே தான். இப்படியே சிகுவேந்திரியம் இரசவிஷயத்தினாற் குய்யேந்திரியத்தை யறிகிறது. தன்னா லறியப்பட்ட குய்யேந்திரியந் தன்னை யறியமாட்டா தாகையாற் சடம்.

இந்தக் குய்யேந்திரியந் தானல்ல. இந்தக் குய்யேந்திரியம் இரசதன்மாத்திரை வியஷ்டி இரசோம்சத்தினாலானது. இந்தக் குய்யேந்திரியத்தினுடைய ஹானிவிருத்திகளினால் வருகிற சுகதுக்கங்க டனக்கில்லை. இந்தக் குய்யேந்திரியமே தானானா லிந்தக் குய்யேந்திரியம் போனாற் றான் போகவேண்டும். இந்தக் குய்யேந்திரியம் போனாலுந் தான் போகவில்லை. ஆனபடியினா லிக் குய்யேந்திரியத்துக்குச் சாட்சியாயறிந்த சிருவேந்திரியமே தான். இப்படியே கிராணேந்திரியங் கந்த தன்மாத்திரையினாற் குதேந்திரியத்தை யறிகிறது. தன்னா லறியப்பட்ட குதேந்திரியந் தன்னை யறியமாட்டா தாகையாற் சடம்.

இந்தக் குதேந்திரியந் தானல்ல. இந்தக் குதேந்திரியங் கந்ததன்மாத்திரை வியஷ்டி இரசோம்சத்தினாலானது. இந்தக் குதேந்திரியத்தினது ஹானிவிருத்திகளினால் வருகிற சுக துக்கங்க டனக்கில்லை. இந்தக் குதேந்திரியமே தானானா லிந்தக் குதேந்திரியம் போனாற் றான் போகவேண்டும். இந்தக் குதேந்திரியம் போனாலுந் தான் போகவில்லை. ஆனபடியினா லிந்தக் குதேந்திரியத்துக்குச் சாட்சியா யறிந்த கிராணேந்திரியமே தான். இந்தச் சுரோத்திரம், தொக்கு, சட்சு, சிருவை, கிராணமென்கிற ஞானேந்திரியங்கள்: சத்த, பரிச, ரூப, ரச, கந்த தன்மாத்திரைகளினால் வாக்கு, பாணி, பாதம், குய்யம், குதங்களென்கிற கன்மேந்திரியங்களை யறிகிறது. தன்னா லறியப்பட்ட கன்மேந்திரியங்கள் தானல்ல. இந்தக் கன்மேந்திரி-

யங்கள் பஞ்சதன்மாத்திரை வியஷ்டி இரசோம்சத்தினு லா னது. ஆகையா லிந்தக் கன்மேந்திரியங்களுடைய ஹானி விருத்திகளினுல் வருகிற சுகதுக்கங்க ளெனக்கில்லை. இந்தக் கன்மேந்திரியங்களே தானுனு லிந்தக் கன்மேந்திரியங்கள் போனுற் றுன் போகவேண்டும். இந்தக் கன்மேந்திரியங்கள் போனுலுந் தான் போகவில்லை. ஆனபடியினு லிந்தக் கன்மேந் திரியங்களுக்குச் சாட்சியா யறிந்த ஞானேந்திரியங்களே தான். இப்படியே சுரோத்திரம், தொக்கு, சட்சு, சிருவை, கிராணங் களென்கிற ஞானேந்திரியங்களுக்குச் சத்த பரிச ரூப ரச கந்த தன்மாத்திரைக ளென்கிற விஷயங்க ளுண்டாயிருந்தாலும் அகங்காரம் பிராணவாயுவோடே கூடிக் கிராணேந்திரியத் தைப் பற்றிக் கந்த மறிகிறது. இப் பிராணவாயு, கிராணேந் திரியம், கந்ததன்மாத்திரை இந்த மூன்றையு மறிந்த வகங் காரமே தான். தன்னுலறியப்பட்ட விந்த மூன்றுந் தன்னை யறியமாட்டா தாகையாற் சடம்.

இந்த மூன்றுந் தானல்ல. இந்த மூன்றுஞ் சமஷ்டி ரசோம்சத்தினுலும், வியஷ்டி சாத்விகாம்சத்தினுலு மானது. இம் மூன்றினுடைய ஹானிவிருத்திகளினுல் வருகிற சுகதுக் கங்க ளெனக்கில்லை. இந்த மூன்றுந் தானுனு லிந்த மூன்றும் போனுற் றுன் போகவேண்டும் இந்தமூன்றும் போனுலுந் தான் போகவில்லை. ஆகையாலிந்த மூன்றுக்குஞ் சாட்சியா யறிந்த அகங்காரமே தான். இப்படியே சித்தம் அபானவாயு வோடேகூடி சிகுவேந்திரியத்தைப்பற்றி இரசத்தையறிகிறது,

ஆகையா லிந்த அபானவாயு, சிருவேந்திரியம், இரசதன்மாத்திரை இம்மூன்றையு மறிந்த சித்தமே தான். தன்னாலறியப்பட்ட இந்தமூன்றுந் தன்னை யறியமாட்டா வாகையாற் சடம்.

இந்தமூன்றுந் தானல்ல. இந்த மூன்றும் இரசோம்ச சமஷ்டியினாலும், சாத்விகாம்ச வியஷ்டியினாலுமானது. ஆகையாலிந்த மூன்றினுடைய ஹானி விருத்திகளினால் வருகிற சுகதுக்கங்க டனக்கில்லை. இந்தமூன்றுமே தானானா லிந்த மூன்றும் போனாற் றான் போகவேண்டும். இந்த மூன்றும் போனாலுந் தான் போகவில்லை. ஆகையா லிந்தமூன்றுக்குஞ் சாட்சியாயறிந்த சித்தமே தான். இப்படியே புத்தி உதான வாயுவோடேகூடி நேத்திரேந்திரியத்தைப்பற்றி ரூபத்தை யறிகிறது. இந்த வுதானவாயு, நேத்திரேந்திரியம், ரூபதன்மாத்திரை இந்த மூன்றையுமறிந்த புத்தியே தான். தன்னாலறியப்பட்ட விந்த மூன்றுந் தன்னையறியமாட்டா வாகையாற் சடம்.

இந்த மூன்றுந் தானல்ல. இந்த மூன்றும் சமஷ்டி இரசோம்சத்தினாலும், வியஷ்டி சாத்விகாம்சத்தினாலுமானது. ஆகையாலிந்த மூன்றி னுடைய ஹானி விருத்திகளினால் வருகிற சுகதுக்கங்க டனக்கில்லை. இந்த மூன்றுமே தானானா லிந்த மூன்றும் போனாற் றான் போகவேண்டும். இந்த மூன்றும் போனாலுந் தான் போகவில்லை. ஆனபடியினா லிந்த மூன்றுக்குஞ் சாட்சியாயறிந்த புத்தியே தான்.

இப்படியே மனது வியானவாயுவுடனே கூடித் தொக்கேந்திரியத்தைப் பற்றிப் பரிசத்தை யறிகிறது. ஆகையா

லிந்த வியானவாயு தொக்கேந்திரியம் பரிசவிஷயம் இந்த மூன்றையு மறிந்த மனமே தான். தன்னாலறியப்பட்ட இந்த மூன்றுந் தன்னை யறியமாட்டா வாகையாற் சடம்.

இந்த மூன்றுந் தானல்ல. இந்தமூன்றும் பரிசதன் மாத்திரை சமஷ்டி இரசோம்சத்தினாலும், வியஷ்டி சாத்விகாம்சத்தினாலுமானது. ஆகையா லிந்த மூன்றினுடைய ஹானிவிருத்திகளினால் வருகிற சுகதுக்கங்க டனக்கில்லை. இந்த மூன்றுமே தானானா லிந்தமூன்றும் போனாற் றான் போகவேண்டும். இந்தமூன்றும் போனாற் றான் போகவில்லை. ஆகையா லிந்த மூன்றுக்குஞ் சாட்சியாயறிந்த மனமே தான்.

இப்படியே ஞானம் சமானவாயுவுடனே கூடிச் சுரோத்திரேந்திரியத்தைப்பற்றிச் சத்தத்தை யறிகிறது. ஆகையால் இந்தச் சமானவாயு, சுரோத்திரேந்திரியம், சத்தவிஷயம் இந்த மூன்றையுமறிந்த ஞானமே தான். தன்னாலறியப்பட்ட விந்த மூன்றுந் தன்னையறியமாட்டா வாகையாற் சடம்.

இந்த மூன்றுந் தானல்ல. இந்தமூன்றுஞ் சத்த தன் மாத்திரை சமஷ்டி இரசோம்சத்தினாலும், விடஷ்டி சாத்விகாம்சத்தினாலுமானது. ஆகையால் இந்த மூன்றினுடைய ஹானி விருத்திகளினால் வருகிற சுகதுக்கங்க டனக்கில்லை. இந்த மூன்றுமேதானானா லிந்த மூன்றும்போனாற் றான் போக வேண்டும். இந்தமூன்றும் போனாலுந் தான் போகவில்லை. ஆனபடியினா லிந்தமூன்றுக்குஞ் சாட்சியாயறிந்த ஞானமே தான். இந்தப் பிராணாதிவாயுக்களைந்து, சுரோத்திராதி

ஞானேந்திரியங்களைந்து, சத்தாதிவிஷயங்களைந்து, ஆகப் பதினைந்தையுமறிந்த ஞானம், மனது, புத்தி, சித்தம், அகங்காரங்களென்கிற அந்தக்கரணங்களே தான். தன்னாலறியப்பட்ட விந்தப் பதினைந்துந் தன்னை யறியமாட்டா வாகையாற் சடம்.

இந்தப் பதினைந்துந் தானல்ல. இந்தப் பதினைந்தும் பஞ்சதன்மாத்திரை சமஷ்டி இரசோம்சத்தினாலும், வியஷ்டி சாத்விகாம்சத்தினாலுமானது; ஆகையா லிந்தப் பதினைந்தினுடைய ஹானிவிருத்திகளினால் வருகிற சுகதுக்கங்க டனக்கில்லை. இந்தப் பதினைந்துந் தானானா லிந்தப் பதினைந்தும் போனாற் றான் போகவேண்டும். இந்தப் பதினைந்தும் போனாலுந் தான் போகவில்லை. ஆகையா லிந்தப் பதினைந்துக்குஞ் சாட்சியாயறிந்த அந்தக்கரணங்களே தான்.

இப்படியே மனதென்றறிந்த ஞானமே தான். தன்னாலறியப்பட்ட மனது தன்னை யறியமாட்டா தாகையாற் சடம்.

இந்த மனது தானல்ல. இந்தமனது பரிச தன்மாத்திரை சமஷ்டி சாத்விகாம்சத்தினாலானது. இந்த மனதினுடைய ஹானி விருத்திகளினால் வருகிற சுகதுக்கங்க டனக்கில்லை. இந்த மனதே தானானா லிந்த மனதுபோனாற் றான் போகவேண்டும். இந்த மனது போனாலுந் தான் போகவில்லை. ஆகையா லிந்த மனதுக்குச் சாட்சியாயறிந்தஞானமே தான்.

இப்படியே புத்தியென் றறிந்த ஞானமே தான். தன்னு லறியப்பட்ட புத்தி தன்னை யறியமாட்டா தாகையாற் சடம்.

இந்தப் புத்தி தானல்ல. இந்தப் புத்தி ரூபதன்மாத்திரை சமஷ்டி சாத்விகாம்சத்தினுலானது. ஆகையா லிந்தப் புத்தியி னுடைய ஹானிவிருத்திகளினல் வருகிற சுகதுக்கங்க டனக் கில்லை. இந்தப் புத்தியே தானுனு லிந்தப்புத்திபோனுற் முன் போகவேண்டும். இந்தப் புத்தி போனுலுந் தான் போக வில்லை. ஆகையா லிந்தப்புத்திக்குச் சாட்சியாயறிந்த ஞானமே தான்.

இப்படியே சித்தமென்றறிந்த ஞானமே தான். தன்னு லறியப்பட்ட சித்தந் தன்னை யறியமாட்டா தாகையாற் சடம்.

இந்தச் சித்தந் தானல்ல. இந்தச் சித்தம் இரசதன்மாத் திரை சமஷ்டி சாத்விகாம்சத்தினு லானது. ஆகையா லிந்தச் சித்தத்தினுடைய ஹானிவிருத்திகளினல் வருகிற சுகதுக் கங்க டனக்கில்லை. இந்தச் சித்தமே தானுனு லிந்தச் சித்தம் போனுற் முன் போகவேண்டும். இச் சித்தம் போனுலுந் தான் போகவில்லை. ஆகையா லிந்தச் சித்தத்துக்குச் சாட்சியா யறிந்த ஞானமே தான். இப்படியே அகங்காரமென் றறிந்த ஞானமே தான். தன்னு லறியப்பட்ட அகங்காரந் தன்னை யறியமாட்டா தாகையாற் சடம்.

இந்த அகங்காரந் தானல்ல. இந்த வகங்காரங் கந்ததன் மாத்திரை சமஷ்டி சாத்விகாம்சத்தினு லானது. ஆகையா லிந்த வகங்காரத்தினுடைய ஹானிவிருத்திகளினல் வருகிற

சுகதுக்கங்க டனக்கில்லை. இந்த வகங்காரமே தானானு லிந்த வகங்காரம் போனாற் றான் போகவேண்டும். இந்த வகங்காரம் போனாலுந் தான்போகவில்லை. ஆனபடியினா லிந்த வகங்கார ரத்துக்குச் சாட்சியாயறிந்த ஞானமே தான்.

இந்த மனம், புத்தி, சித்தம், அகங்காரங்களென்கிற சமுசய நிச்சய சாஞ்சல்லிய அபிமானங்களையறிந்த ஞானமேதான். தன்னா லறியப்பட்ட விந்நாலுந் தன்னை யறியமாட்டா தாகையாற் சடம். இந்நாலுந் தானல்ல. இந்நாலும் பரிச, ரூப, ரச, கந்த தன்மாத்திரைகளினுடைய சமஷ்டி சாத்விகாம்சத்தினாலானது. இந்த நாலினுடைய ஹானி விருத்திகளினால் வருகிற சுகதுக்கங்க டனக்கில்லை. இந்நாலுமே தானானு லிந்நாலும் போனாற் றான்போகவேண்டும். இந்நாலும் போனாலுந் தான்போகவில்லை. ஆகையால் இந்நாலுக்குஞ் சாட்சியாயறிந்த ஞானமே தான். வசன, தான, கமன, ஆநந்த, விசர்க்க மிவைகளைப் பண்ணுகிற கிரியாசத்தியான கன்மேந்திரியங்க ளைந்தும், சத்தாதிவிஷயங்க ளைந்தும், இந்த விஷயங்களைக் கிரியாசத்தியான ஞானேந்திரியங்க ளைந்தும், உசுவாச ரூபமான பிராணவாயுவும், நிசுவாசரூபமான அபானவாயுவும், முழங்கப்படுகிறதுந் தும்முகிறது மிருமுகிறதுங் கண்திறக்கிறதும் மூடுகிறதுமான வுதானவாயுவும், புசித்த வன்னத்தை வியாபிக்கப்பண்ணுகிற வியானவாயுவும், புசித்த பதார்த்தத்தைச் சமானமாகப்பண்ணுகிற சமானவாயுவும், இப்படிப்பட்ட கிரியாசத்தியானபிராணாதி வாயுக்க ளைந்தும், இவைகளை யெல்லாமறிகிற அந்தக்கரணங்க ளுலுமாக விரு

பத்துநாலுந் தன்னையறியமாட்டா வாகையாலும், போகட்டுந் தங்களைத்தாங்க ளறிவார்களோ? அதுவுமில்லாதபடியினாலும் ஒருத்தரையொருத்த ரறிவார்களோ? இதுவுமில்லாதபடியினாலுங் கிராகசத்திக் கிரியாசத்திகளா யிருக்கிறபடியினாலுஞ் சடங்களானபடியினாலும் இந்த விருபத்துநான்கு தத்துவங்களுந் தானல்ல. இந்த விருபத்துநான்கு தத்துவங்களும் பஞ்சதன்மாத்திரையினுடைய சமஷ்டி வியஷ்டி ராஜச சாத்விகாம்சத்தினாலானது. இந்த விருபத்துநான்கு தத்துவங்களினுடைய ஹானி விருத்திகளினால்வருகிற சுகதுக்கங்க டனக்கில்லை. இந்த விருபத்துநான்கு தத்துவமுந் தானானாலிந்த விருபத்துநான்கு தத்துவமும் போனாற் றான் போகவேண்டும். இந்த விருபத்து நான்குதத்துவம் போனாலுந் தான்போகவில்லை. எப்படிப்போகவில்லையென்றா னித்திரையிலிந்த விருபத்துநான்கு மில்லாமற் போனாலுந் தான் காரணாத்மகமாயிருந்துகொண்டு திரும்பவும் விருத்திவந்து விழித்தவுடன் இந்தவிருபத்துநான்கு தத்துவமுமில்லாமற் சுகமேயிருந்தேனென்று தானிருந்த வனுபவஞ்சொல்லுகிறானானபடியினாலும், இந்த விருபத்துநான்கு தத்துவமுந் தானல்ல; இந்த விருபத்துநான்கு தத்துவங்களும் க்ஷேத்திரம்; இந்த விருபத்துநான்கு தத்துவங்களையு மறிந்த ஞானமே க்ஷேத்திரக்ஞன். இந்த விருபத்துநான்கு தத்துவங்களும் அநாத்மா; இந்த விருபத்துநான்கு தத்துவங்களை யறிந்த வறிவே ஆத்மா. இந்த விருபத்துநான்கு தத்துவங்களும் பிரகிருதி; இந்த விருபத்துநான்கு தத்துவங்களையு மறிந்த வறிவே புருஷன். இதற்குச் சம்மதிவசனம்.

சுலோகம்.

ரூபம்த்ருஶ்யம்லோசநம்த்ருக்தத்ருஶ்யம்த்ருக்துமாநஸம்
த்ருஶ்யாதிவ்ருததீஸாக்ஷித்ருகேவஸதுத்ருஶ்யதே. (உ௲)

இதனதுபொருள்.

ரூபந் திரிஸ்யம்; கண் திருக்கு. அக்கண் திரிஸ்யம்; மனந் திருக்கு. அம்மனந் திரிஸ்யம்; ஆத்மா திருக்கு. அவ்வாத்மா திரிஸ்ய மாகமாட்டாது.

என்று வித்தியாரண்யசுவாமிகள் சொல்லியிருக்கிறபடியினாலும், சுருதிகளிலுமிவ்வாறே சொல்லியிருக்கிறபடியினாலும், இதுவே பிரமாண சித்தம்.

இந்த க்ஷேத்திரஞ்ஞனை தானே சமஷ்டி சூட்சும சரீரங்களிலும், இவைகளுக்குக் காரணமான அபஞ்சீகிருதமான பஞ்சதன்மாத்திரைகளிலும் அநுசூதமா யிருந்துகொண்டு சாட்சியாயறிகிற னுனபடியினாலும், இந்தச் சமஷ்டி வியஷ்டியான சூட்சுமசரீரங்களும் இவைகளுக்குக் காரணமான அபஞ்சீகிருத பஞ்சதன்மாத்திரைகளுந் தானல்ல; தனக்கெதிராய்த் தோற்றுகிற விந்தச் சமஷ்டி வியஷ்டியான சூட்சுமசரீரங்களிடத்திலு மிவைகட்குக் காரணமான பஞ்சதன்மாத்திரைகளிடத்திலும் அத்தியஸ்தமாய்த் தோற்றுகிறதைத் தைசதனென்றும், சொர்ப்பன கற்பிதனென்றும், பிராதிபாதிகனென்றும், இரணியகர்ப்பனென்றும், மஹாப்பிராணனென்றும், சூத்திராத்மாவென்றும், அபிமானத்துவமும், சொர்ப்பனுவத்தையும், கண்டஸ்தானமும், சுயேச்சாபோகமும், உகார

மாத்திரையும், சாத்விககுணமும், இச்சாசத்தியும், விஷ்ணு மூர்த்தியும், பிராணமயகோசமும், மனோமயகோசமும், விஞ் ஞானமயகோசமும், நான் வார்த்தைசொல்லுகிறவன், நான் தாதா, நான் நடக்கிறவன், நான் சலவிசர்ச்சனம் பண்ணுகிற வன், நான் ஊமையன், நான் நொண்டி, நான் முடவன், நான் பத்தகோஷன், நான் பண்டகனென்கிற கன்மேந்திரியங்களு டைய கிரியாவத்தியாசங்களும்; நான் கேட்கிறவன், நான் பரி சிக்கிறவன், நான் பார்க்கிறவன், நான் உருசியறிகிறவன், நான் வாசனையறிகிறவன், நான் செவிடன், நான் மரத்துப்போயிருக் கிறவன், நான் குருடன், நான் உருசியறியாதவன், நான் மூக் கறையனென்கிற ஞானேந்திரியங்களுடைய கிராகாத்தியாசங் களும்; நான் சீவிக்கிறவன், நான் சஞ்சரிக்கிறவன், நான் சத்தி யுடையவன், நான் வீரியமுடையவன், நான் பசித்தவனென் றும், நான் தாகித்தவனென்றும், நான் வாயுவேகனென்றும், நான் பலமுடையவனென்றும், நான் அம்பரையான சித்தன், நான் அடயோகி, நான் லயயோகியென்றும், நான் கண்திறந்து மூடுகிறவன், நான் இருமுகிறவன், நான் தும்முகிறவன், நான் கொட்டாவிவிடுகிறவன், நான் விழுங்குகிறவனென்றும், நான் வாந்திபண்ணுகிறவன், நான் சீரணம்பண்ணிக்கொள்ளுகிற வன், நான் ஏப்பமிடுகிறவனென்றும் இவை முதலாகிய பஞ் சப்பிராணங்களுடைய கிரியாத்தியாசங்களும்; நான் சங்கற்ப வர்த்தன், நான் மனோவேகி, நான் போகி, நான் மந்திரயோகி, நான் சோகி, நான் இராகி, நான் மோகி, நான் துவேஷி, நான் காமி, நான் சமுசயமுள்ளவனென்றும், நான் புத்திவந்தன்

நான் விவேகி, நான் மகாபுத்தியுள்ளவன், நானேகசந்தக்கிராகி, நான் கர்த்தா, நானிச்சயவந்தன், நான் விருத்தன், நான்பண்டிதன், நான் உலோகாந்தரகாமி யென்றும், நான் சஞ்சலன், நான் சபலன், நான் சிந்தகனென்றும், நானகங்காரி, நானுக்கிரன், நான் வீரன், நான் சூரன், நா னபிமானியென்கிற இவை முதலான வந்தக் கரணங்களுடைய கிராகாத்தியாசங்களும்; உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதங்களென்கிற வேதசுரங்களும், சத்தசுரங்களும், இராககீதங்களும், பேரி, மிருதங்க, சங்க, பணவ, கோமுகாதி வாத்தியங்களும், சதுர்வித பேத சத்தங்களும், இலாப, பிரலாப, துர்லாப, பருஷாலாப, காடின்னியாலாப, சோகாதி துக்கசத்தங்களும், அஷ்டாதச பாஷைகளும் இன்னும், இவைமுதலான சத்தங்களுடைய வத்தியாசங்களும், சீத உஷ்ண மிருது கடின தாரதன்மியாதி பரிசத்தினுடைய வத்தியாசங்களும், நீல பீத சுவேத ரத்த அரிசன முதலான தாரதன்மியாதி ரூபத்தினுடைய வத்தியாசங்களும், உப்பு புளிப்பு கைப்பு தித்திப்பு துவர்ப்பு முதலான இரச தாரதன்மியமான உருசியினுடைய வத்தியாசங்களும், சுகந்த துர்க்கந்த மிஸ்ரகந்த தாரதன்மியாதி வாசனைகளினுடைய வத்தியாசங்களும், இந்தச் சூட்சுமப் பிரபஞ்சத்தைக்குறித்துச் சொல்லப்பட்ட சத்தசாஸ்திர தர்க்கசாஸ்திர மீமாம்ச சாஸ்திரங்களும், இன்னுஞ் சமஷ்டி வியஷ்டியினுண்டான அநேக வத்தியாசங்களும், இன்னும் இவைமுதலான விந்தச் சூட்சுமப் பிரபஞ்சத்தின்பேரிற் றோற்றுகிற சகல வத்தியாசங்களும், இதற் காதாரமான சூட்சுமப் பிரபஞ்சமும்,

சசவிஷாண வந்தியாபுத்ர ககனாரவிந்த மித்தியாபுருஷன் போலவே காலத்திரயத்திலுந் தன்னிடத்திலில்லை. இந்த விருபத்துநான்கு தத்துவங்களைக் குறித்துச் சூட்சுமசரீர மென்று சொல்லுவோமென்றால், இந்த விருபத்துநான்கு தத்துவங்களும் விருத்திரூபமாய் வெவ்வேறு நாமங்க ளிருக்கிறபடியினாலும் ஞானம் சமானவாயு சுரோத்திரேந்திரியம் வாக்கிந்திரியம் ஆகிய இந்நான்கு விருத்தியுஞ் சத்ததன்மாத்திரையைத் தவிர வில்லாதபடியினாலும், மனது வியானவாயு தொக்கேந்திரியம் பாணீந்திரியம் ஆகிய இந்நான்கு விருத்தியும் பரிசதன்மாத்திரையைத் தவிர வில்லாதபடியினாலும், சித்தம் அபானவாயு சிகுவேந்திரியம் குய்யேந்திரியம் ஆகிய இந்த நான்குவிருத்தியும் இரசதன்மாத்திரையைத் தவிர வில்லாதபடியினாலும், அகங்காரம் பிராணவாயு கிராணேந்திரியம் குதேந்திரியம் ஆகிய இந்த நான்குவிருத்தியுங் கந்த தன்மாத்திரையைத் தவிர வில்லாதபடியினாலும், இந்தப் பஞ்சதன்மாத்திரைகளைப் பிரத்தியேகமாய் விவகரித்துப் பார்க்குமிடத்தில், அகங்காரதத்துவ மென்கிற அவஸ்தையி லத்தியஸ்தமாய்த் தன்னிடத்தி லெதிராய்த்தோற்றுகிற அபஞ்சீகிருதமான பஞ்சதன்மாத்திரைகளும், இவைகளுக்குக் காரியமான சூட்சுமப் பிரபஞ்சமும், இதனிடத்தி லத்தியஸ்தமாய்த் தோற்றுகிற நாமங்களும், இதைக்குறித்து வந்த வாபாசங்களுஞ் சசவிஷாண வந்தியாபுத்திர ககனாரவிந்த மித்தியாபுருஷன்போலவே காலத்திரயத்திலுந் தனக்கில்லை. இதற்குச் சம்மதிவசனம்,

சுலோகம்.

பஞ்சபூதமயம்விஶ்வம்மரீசிஜலஸந்நிபம்
கஸ்யேஹாபூந்நமஸ்காரோயோஹமேகோநிரந்தர꞉. (உச)

இதனதுபொருள்.

பஞ்சபூத ஸ்வரூபமான பிரபஞ்சங் கானற்சலத்துக்கொப்பானது. நானே யெங்கும் பரிபூரணமாயிருக்கிறேன். ஆருக்கு நமஸ்காரம் என்றும்,

சுலோகம்.

மநோநபுத்திர்நஶரீரமிந்த்ரியம்தந்மாத்ரபூதாநிநபூதிபஞ்சகம்,
அஹங்க்ருதிஶ்சாபிநசித்ஸ்வரூபம்தமீஶமாத்மாநமுபைதிஶாஶ்வதம். (உரு)

இதனதுபொருள்.

சிற்சொரூபமாயும், சர்வேஸ்வரனுயும், சாஸ்வதமாயுமிருக்கின்ற ஆத்மஸ்வரூபத்தை மனதும், புத்தியும், அகங்காரமும், பஞ்சதன்மாத்திரையும், பஞ்சமகா பூதங்களும், சரீரமும் அடையமாட்டாது.

என்றும் அவதூதகீதை முதலிய சாஸ்திரங்களில் தத்தாத்திரய யோகீஸ்வரர்முதலிய பெரியோர்கள் சொல்லியிருக்கிறபடியா லிதுவே பிரமாண சித்தம்.

சூட்சுமப்பிரகரணம்

சம்பூரணம்.

ஐந்தாவது

காரணப்பிரகரணம்.

முற்பிரகரணத்திற் சங்கற்பரூபமான சூட்சும சரீரத்தை யும், அதற் காதாரமான பஞ்சதன்மாத்திரைகளையும், நியதி களைந் தவைகட் காதாரமான வவித்தையை நியதி களைதற் பொருட் டதன்மயமான காரணசரீர ஸ்வரூபம் நிரூபிக்கிருர்.

சுலோகம்.

ஸச்சிதாநந்தஸ்வரூபேஸ்வாத்மந்யாரோபிதம்வபுஃ
காரணம்தத்ஸ்வரூபந்துதாவத்தத்ரநிரூப்யதே. (உசு)

இதனதுபொருள்.

சச்சிதானந்த ஸ்வரூபமான தன்னிடத்தி லாரோபிக்கப் பட்டது காரணசரீரம். அதினுடைய ஸ்வரூபமானது நிரூ பிக்கப்படுகிறது.

காரணசரீரமாவது பஞ்ச தன்மாத்திரைகள் பிரத்தி யேகம் பிரத்தியேகமாய் விவகரித்துப் பார்க்குமிடத்திற் சச விஷாண வந்தியாபுத்திர ககனாரவிந்த மித்தியாபுருஷன் போலவே யொன்று மில்லாமற் போனபடியினல் இது வொன்றுமில்லையென்று தோற்றப்பட்டதே காரணசரீரம். இந்தக் காரணசரீரத்துக்கு அகங்காரத்துவ மென்றும், அவித்தையென்றும், தமசென்றும், தூலசூட்சும சரீரங்களுக்

குக் காரணமென்றும், ஒன்றுந் தெரியவில்லை என்றும், ஒன்றுங் காணவில்லை யென்றும், ஒன்றுந் தோணவில்லை யென்றும், பிராந்தி என்று மிவை முதலான பரியாயநாமங்களை யுடைய விதுவே காரணசரீரம். இதற்குச் சம்மதிவசனம்.

சுலோகம்.

அநாத்யநிர்வாச்யதயாகாரணோபாதிருச்யதே
உபாதித்ரிதயாதந்யமாத்மாநமவதாரயேத். (உஎ)

இதனதுபொருள்.

அநாதியாகியும், அநிர்வாச்சியமாகியு மிருக்கின்றபடியாற் காரணோபாதியென்று சொல்லப்பட்டது. இம்மூன் றுபாதிகளுக்கும் அன்னியமா யாத்மாவை யறியவேண்டியது.

என்று ஆசாரியசுவாமிக ளாத்மபோதமென்கிற கிரந்தத்தி னிரூபித்திருக்கிறு ரானபடியினு லிதுவே பிரமாண சித்தம்.

தன்னிடத்தி லத்தியஸ்தமாய்த் தோற்றுகிற விந்தக் காரணசரீரந் தானல்ல. அதெப்படித் தானல்லவென்றால், ஒன்றுமில்லையென்றால் ஒன்றுமில்லையென்று தோற்றப்பட்ட விந்தக் காரணசரீரத்துக் கொன்றுமில்லையென் றறிந்த ஞானமே தான். தன்னாலறியப்பட்ட விந்தக் காரணசரீரந் தன்னை யறியமாட்டா தாகையாற் சடம். இந்தக் காரணசரீரந் தானல்ல. இந்தக் காரணசரீர மகதத்துவத்தினாலானது. இந்தக்

காரணசரீரத்தினுடைய ஹானி விருத்திகளினால் வருகிற சுகதுக்கங்க ளெனக்கில்லை. இந்தக் காரணசரீரமே தானானு லிந்தக் காரணசரீரம் போனாற் றான் போகவேண்டும். இந்தக் காரணசரீரம் போனாலுந் தான் போகவில்லை. அதெப்படி போகவில்லையென்றாற் சமாதி யவஸ்தையிற் காரணசரீரம் போனாலுந் திரும்பவும் விருத்திவந்தபின்பு சுகமே யிருந்தே னென்று சொல்லுகிறா னானபடியினா லிந்தக் காரணசரீரந் தானல்ல. இந்தக் காரணசரீரத்துக்குச் சாட்சியாயறிகிற ஞானமே தான்.

இந்தக் காரணசரீரத்துக்குச் சாட்சியாயறிகிற தானே சமஷ்டி காரணசரீரங்களிலேயும் அனுசூதமாயிருந் தறிகிற ஞானமே தான். தன்னாலறியப்பட்ட விந்தச் சமஷ்டிகாரண சரீரந் தன்னை யறியமாட்டா தாகையாற் சடம்.

இந்தச் சமஷ்டி காரணசரீரந் தானல்ல. இப்படித்தனக் கெதிராய்த் தோற்றுகிற சமஷ்டி வியஷ்டியான காரணசரீரத் தின்பேரி லத்தியஸ்தமாய்த் தோற்றுகிற பிராஞ்ஞன், பார மார்த்திகன், அவச்சின்னன், அவ்வியாகிருதனென்கிற அபி மானித்துவமும், சுழுத்தி யவஸ்தையும், ஆனந்தமயகோச மும், தாமசகுணமும், ஆத்மானந்த போகமும், ஞானசத்தி யும், உருத்திரமூர்த்தியும், இருதயஸ்தானமும், மகாரமாத் திரையும்; நான் போதகுரு, நான் சந்துஷ்டன், நான் சாத் விகன், நான் இராசதன், நான் தாமசன், நான் சடன், நா

னனூர்தன், நானஞ்ஞானி, நான் மூடன், நான் சந்தன், நான் சுண்டன், நான்மோகி, நான் விவேகி, நான் பிராந்தன், நான் பாபிஷ்டன், நான் சோம்பன், நானொன்றுக்கு மாகாதவன், நானெறிந்துபோட்டவன், நான் கெட்டுப்போனவன், நான் வெறியன், நான் கையாலாகாதவ னென்கிற பிராந்திஜந்யாத்தியாசத்துவமும்; இந்தக் காரணசரீரத்தைக்குறித்துச் சொல்லப்பட்ட சத்தசாஸ்திரம், யோகசாஸ்திரம், வேதாந்தசாஸ்திரமுதலிய சாஸ்திரங்களும், சமஷ்டி வியஷ்டியென்கிற வத்தியாசங்களும், இன்னும் இவைமுதலான விந்தக்காரண பிரபஞ்சத்தின்பேரிற் றோற்றுகிற சகல வத்தியாசங்களுஞ் சசவிஷாண வந்தியாபுத்திர ககனாரவிந்த மித்தியாபுருஷன்போலவே காலத்திரயத்திலுந் தனக்கில்லை. அதெப்படி தனக்கில்லையென்று லதற்குத் திருஷ்டாந்த பூர்வகமாகச் சொல்லுகிறோம்.

அதென்னவென்றால், கடத்தைக்குறித்துவந்த கடாபாவங் கடத்தைத்தவிர வெப்படியில்லையோ, அப்படியே பிரபஞ்சத்தைக் குறித்துவந்த பிரபஞ்சாபாவமும் பிரபஞ்சத்தைத் தவிரவில்லை. ஆனபடியினால் மகதத்துவத்தின்பேரி லத்தியஸ்தமாய்த் தோற்றுகிற விந்தக் காரணப்பிரபஞ்சமும் இதனிடத்தி லத்தியஸ்தமாய்த் தோற்றுகிற பிராந்திஜந்ய நாமங்களும், இதைக் குறித்துவந்த வாபாசங்களும் சசவிஷாண வந்தியாபுத்திர ககனாரவிந்த மித்தியாபுருஷன் போலவே காலத்திரயத்திலுந் தனக்கில்லை சித்தம். இதற்குச் சம்மதிவசனம்.

சுலோகம்.

தேஹேந்த்ரியமநோபுத்திப்ரக்ருதிப்யோவிலக்ஷணம்
தத்வ்ருத்திஸாக்ஷிணம்வித்யாதாத்மாநம்ராஜவத்ஸதா (உ௪)

இதனதுபொருள்.

தேகம், இந்திரியம், மனது, புத்தி, பிரகிருதி இவைகளுக்கு விலட்சணமாகியும், அவைகளின் விருத்திகளுக்குச் சாட்சியாகியும், இராசாவைப்போல வெங்குஞ் சம்பந்தமில்லாதவனாகியும் ஆத்மாவை யறியவேண்டியது.

என்று ஆசாரியசுவாமிக ளாத்மபோதமென்கிற கிரந்தத்தி னிருபித்திருக்கிறு ரானபடியினு லிதுவே பிரமாணசித்தம்.

காரணப்பிரகரணம்

சம்பூரணம்.

ஆருவது

மகாகாரணப்பிரகரணம்.

முற்பிரகரணத்தில் அவித்தியாமயமான காரண சரீரத்தை நியதிகளுந் ததற்காதாரமான வித்தையை நியதிகளை தற்பொருட் டதன்மயமான மஹாகாரணசரீர ஸ்வரூபம் நிரூபிக்கிறுர்.

சுலோகம்.

ஸச்சிதாநந்தஸ்வரூபேஸ்வாத்மங்யாரோபிதம்வபுః
மஹாகாரணமேதஸ்யஸ்வரூபந்துநிரூப்யதே. (உகூ)

இதனதுபொருள்.

சச்சிதானந்த ஸ்வரூபமான தன்னிடத்தி லாரோபிக்கப் பட்டது மகாகாரணசரீரம். அதனுடைய ஸ்வரூபமானது நிரூபிக்கப்படுகிறது.

அதெப்படி யென்னிற் றமோகுணப் பிரதானமான வகங்கார தத்துவமென்கிற காரணசரீரம் போனபின்பு சுத்த சத்துவகுணப் பிரதானமான மகதத்துவமென்கிற பிரத்தியகாத்துமாவுக்கே மகாகாரண சரீரமென்றுபேர். இந்தப் பிரத்தியகாத்துமாவென்கிற மகாகாரண சரீரத்துக்கே சித்தென்றும், சைதன்யமென்றும், போதமென்றும், கூடஸ்தனென்றும், ஞானமென்றும், சாட்சியென்றும், திருக்கென்

றும், திரிசியானுவித்தமென்றும், இவைமுதலான பரியாய நாமங்களாம். இதற்குச் சம்மதிவசனம்.

சுலோகம்.

மாயோபாதிர்ஜகத்யோநிஸர்வஜ்ஞத்வாதிலக்ஷணம்
பாரோக்ஷ்யஶபளஸ்ஸத்யாத்யாத்மைகஸ்தத்பதாபிதః (௬0)

இதனதுபொருள்.

மாயோபாதிகனும், ஜகத்துக்குக் காரணமாயும், சர்வஞ்ஞத்துவம் முதலான இலட்சணங்களோடே கூடினவனுகியும், பரோக்ஷமாயுஞ் சபதிமாயையாயுமிருக்கின்ற விஸ்வரனே தத்பதார்த்தமாம்.

என்று ஆசாரிய சுவாமிகள் வாக்கால் விருத்தியென்கிற கிரந்தத்தில் நிரூபித்திருக்கிறு ரானபடியினு லிதுவே பிரமாண சித்தம். பின்னுமிந்தப் பிரத்தியகாத்துமாவான சாட்சியே சாட்சியமான சகத்துரூபமாய்த் தோற்றுகிறபடியினு லிந்தச் சகத்துரூபமாய்த் தோற்றுகிற மகாகாரணசரீரமான பிரத்தியகாத்மாவுக்கே அகண்டாகார விருத்தியென்றும், ஆனந்த விருத்தியென்றும், சம்பிரஞ்ஞாத சமாதியென்றும், சத்தானுவித்தமென்றும், ஓங்காரமென்றும், பிரணவமென்றும், போதாங்குர மென்றும், தோணலென்றும், கிராகசத்தியென்றும், சிற்சத்தியென்றும், பிரதமாபாசமென்றும், பின்னும் அசங்க சச்சிதானந்த சொற்பிரகாச நித்த சுத்த புத்த நின்மல நிராகார நிருபத்திரவ நிர்ச்சங்க நிர்விகார நிர்விகற்ப நிராலம்ப அகண்டானந்த பரிபூரணுநந்த நித்தியாநந்த நிர்

விசேஷானந்த ஸ்வரூப பாவமென்கிற சத்தானுவித்த சவ்விகற்ப சமாதியென்றும் இன்னும் இவைமுதலாய் மகத்தான பரியாய நாமங்களாம். இதற்குச் சம்மதிவசனம்.

சுலோகம்.

ஏகம்ப்ரஹ்மசிதாகாஶம்ஸர்வாத்மகமகண்டிதம்
நிரந்தரம்நிராகாரமிதிபாவயராகவ. (௩க)

இதனதுபொருள்.

சிதாகாச ஸ்வரூபமாகியும், சர்வ ஸ்வரூபமாகியும், அகண்டாகார மாகியும், நிரந்தரமாகியும், நிராகாரமாகியும், ஏகமாகியுமிருக்கின்ற பிரமத்தைப் பாவனம் பண்ணும்.

என்று வாசிட்டராமாயணமென்கிற கிரந்தத்தில் ஸ்ரீராமரைப் பார்த்து வசிட்ட ருபதேசம்பண்ணியிருக்கிறு ரானபடியினுலும், இவ்வாறு சுருதிகளிலுஞ் சொல்லப்பட்டிருக்கிறபடியினுலும், இதுவே பிரமாணசித்தம்.

இவை முதலான வியஷ்டி சமஷ்டி அகண்டாகார விருத்திகளுடைய பரியாயநாமங்களோடே கூடியிருக்கிறதே மூலப்பிரகிருதி யென்கிற மகாகாரணசரீரம். தன்னிடத்தி லத்தியஸ்தமாய்த் தோற்றுகிற விந்த மகாகாரண சரீரந் தானல்ல. அதெப்படித் தானல்லவென்றுல், தூஷ்ணீம் பூதாவத்தையிலிந்த மகா காரணசரீர மில்லாமற்போனுலுந் தானென்கிற பிரதீதியில்லாமற் றுனுயிருக்கிறபடியினு லிந்த மகாகாரணசரீ

ரந் தானல்ல. இந்த மகா காரணசரீரத்தின்பேரி லத்தியஸ்த மாய்த் தோற்றுகிற சர்வஞ்ஞனென்றும், திரிகால வேதியென் றும், தானே சர்வமென்றும், தன்னுடைய கற்பனையே சகத் தென்றும், தன்னிடத்திற் சகத்துற்பத்தி ஸ்திதி சங்காரங்க ளாகிறதென்றும், தானே சகத்துக்குக் காரணமென்றும், தானே சர்வசத்திவந்தனென்றும், தானே சர்வத்திலு மநு சூதமாயிருக்கிறவனென்றும், தானே சுவர்க்க மத்திய பாதாள பிரமலோகாதி சகலலோகங்களிலுமிருக்கிற பேர்களுடைய விர்த்தாந்தங்களெல்லாந் தெரிகிறவனென்றும், பின்னுந் தனக் குத் துரியாவத்தை யென்றும், மூர்த்தன்ய ஸ்தானமென்றும், ஆனந்தபோக மென்றும், பிந்துவென்றும், இந்த மகா காரண சரீரத்தைக் குறித்துச் சொல்லப்பட்ட சத்தசாஸ்திரம் தர்க்க சாஸ்திரம் மீமாம்ச சாஸ்திரம் யோகசாஸ்திரம் வேதாந்த சாஸ்திர மிவைமுதலிய சகல சாஸ்திரங்களும் இந்தச் சாஸ் திரங்களுக் கேதுவான சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி வாக்கென்கிறதும் இவை முதலான சகல வத்தியாசங்களும் சசவிஷாண வந்தியாபுத்திர ககனாரவிந்த மித்தியாபுருஷன் போலவே காலத்திரயத்திலுந் தனக்கில்லை. இப்படித் தன் னிடத்தி லத்தியஸ்தமாய்த் தோற்றுகிற இந்தச் சாட்சித்துவ மென்கிற மகா காரணசரீரமே சாட்சியமென்னப்பட்ட பிர பஞ்சத்தைக் குறித்துவந்தது. ஆனபடியினா லிந்தச் சாட்சிய மாயிருக்கப்பட்ட பிரபஞ்சங் காலத்திரயத்திலுந் தன்னிடத்தி லில்லை; ஆனபடியினா லிந்தச் சாட்சியத்தைக் குறித்து வந்த சாட்சித்துவ மென்கிற மகா காரணசரீரமும் இதனிடத்தில்

அத்தியஸ்தமாய்த் தோற்றுகிற சர்வஞ்ஞத்துவாதி நாமங்களும் இதைக் குறித்துவந்த ஆபாசத்துவமும் சசவிஷாண வந்தியாபுத்திர ககனாரவிந்த மித்தியாபுருஷன் போலவே காலத்திரயத்திலுந் தனக்கில்லை; ஆனபடியினு லிந்தச்சாட்சி சாட்சியரகிதமாய் நினைப்பு மறப்பில்லாமல், தியானத்தியேய மில்லாமல் தூஷ்ணீம் பூதனுயிருக்கப்பட்ட சுகஸ்வரூபங் குருவாக்கியத்திற் றானென் றறிந்து நின்றதே மூலப்பிரகிருதி ரகிதமான தன்னுடைய ஸ்வரூபம். இதற்குத் திருஷ்டாந்தம் ஆறுகடந்து பத்துப்பேர் போகச்சே, அந்தப் பத்துப்பேர் கணக்காளியான வொருவன் மற்ற வொன்பதுபேரையு மெண்ணித் தன்னை யெண்ணுமற் பத்தாவான் றானுயிருந்துந் தன்னைப் பத்தாவானென் றறியாமற் போனதே அதிஷ்டானுஞ் ஞானமான மூலப்பிரகிருதி ஆபத்தாக்கியத்தினுற் பத்தாவான் றானென்றறிந்து நின்றதே மூலப்பிரகிருதி ரகிதமான தன்னுடைய ஸ்வரூபம். இதற்குச் சம்மதிவசனம்.

ஞானஞ் சுளுவுமாம், பளுவுமாம்; அதெப்படி யென்னில், தானென்றறிந்த அறிவு தானெனல் சுளுவு. அதுதான் அன்றென்கிற மறதியே பளுவென்று லோககுருவா யிருக்கப்பட்ட வேதவியாசபகவான் ஸ்ரீராம ஸ்தவராசமென்கிற கிரந்தத்தினிருபித்திருக்கிறபடியினுலும்; அறிந்தேனென்கிறநினைப்பும், அறியேனென்கிற மறப்பும் இவ்விரண்டுமின்றி யிருக்கிறதே நிரதிசயானந்தமென்று அவதூத கீதையில் தத்தாத்திரய யோகீஸ்வரர் நிருபித்திருக்கிறபடியினுலும்; ஆசிரியர்,

சீடன் இவர்களுடைய பிரசினோத்தரம்: ஆலம்பழத்தைக் கொண்டுவா, சுவாமீ இதோ கொண்டுவந்தேன். அதைப்பிள, பிளந்தேன். அதிலென்ன கண்டாய்? ஒன்றுங் காணவில்லை, பரமாணுக்களைக் கண்டேன். அப்பரமாணுக்களிலொன்றைப் பிள, பிளந்தேன். அதிலென்ன கண்டாய்? ஒன்றுங் காண வில்லை. இப்படிக்கொத்த அணுவான விரையில் இலை, பணை, விழுது, பொந்துகள் முதலான விகாரங்களோடு கூடிய ஆல மரமானது எப்படி அடங்கியிருந்ததோ, அப்படியே யுன் னிடத்தி னாமரூபமான பிரபஞ்சமு மடங்கி யிருக்கின்றது என்று சாந்தோக்கிய வுபநிடதத்திற் சொல்லியிருக்கிறபடியி னாலும், இதுவே பிரமாணசித்தம்.

மகாகாரணப்பிரகரணம்

சம்பூரணம்.

ஏழாவது

நிசானந்தானுபூதிப்பிரகரணம்.

முற்பிரகரணத்தில் வித்தியாரூபமான மஹா காரண சரீரத்தை நியதிகளைந் திவைகட் காதாரமான சச்சிதானந்த வொருமையினுள்ள நிரதிசயானந்த வனுபவ மாம்பொருட் டதற்கங்கமான நிசானந்தானுபூதிப் பிரகரணம் நிரூபிக்கிறார்.

சுலோகம்.

நிர்க்குணோநிஷ்க்ரியோநித்யோநிர்விகல்போநிரஞ்ஜநః
நிர்விகாரோநிராகாரோநித்யமுக்தோஸ்மிநிர்மலః. (௩௨)

இதனதுபொருள்.

ஒரு குணமுமில்லாதவனாய், ஒரு கர்மமுமில்லாதவனாய், ஒரு விகற்பமுமில்லாதவனாய், ஒரு களங்கமுமில்லாதவனாய், ஒரு விகாரமுமில்லாதவனாய், ஒருருவமு மில்லாதவனாய், நித்தியமுத்தனாய், மலரகிதனா யிருக்கிறேன்.

அஃதாவது மூலப்பிரகிருதி ரகிதமான தன்னுடைய ஸ்வரூபவர்ணநீயநாமங்களெப்படியென்னில், சத்தே சுயந் தோன்றுகிறபடியினாற் சித்தாச்சு. சித்தே சுயமாயிருக்கிறபடி யாற் சத்தாச்சு. இதற் கிரண்டாம்வஸ்து வில்லாதபடியினா லானந்தமாச்சு. ஆகச்சே சச்சிதானந்த ஸ்வரூபமாய், அகண் டானந்த ஸ்வரூபமாய், பரிபூரணானந்த ஸ்வரூபமாய், நித்தி யானந்த ஸ்வரூபமாய், நிர்விசேஷானந்த ஸ்வரூபமாய்; நிரூப,

நிருபத்திரவ, நின்மல, நிரவயவ, நிரந்தர, நித்திய, நிராகார, நிபத்த, நிஷ்கர்ம, நிர்ச்சங்க, நிர்விகார ஸ்வரூபமாய்; நிர்க்குண, நிஷ்கிரிய, நிர்விகற்ப, நிரஞ்சன, நிர்லட்சிய, நிராலம்ப, நிரதிசயானந்த ஸ்வரூபமாய்; நிரீச, நிர்லேப, நிர்ச்சித்திய நிர்வசன, நிரூபானந்த ஸ்வரூபமாய்; நிர்வேத்திய, நிச்சல, நிச்சேஷ, நிர்ச்சத்த, நிர்ச்சீவ, நிர்ச்சலானந்த ஸ்வரூபமாய்; நிர்ப்பின்ன, நிர்ப்போத, நிர்நாம, நிர்வியாச்சிய, நிர்ப்பாவ, நிஷ்பிரபஞ்ச ஸ்வரூபமாய்; அச்சேத்திய, அக்கிலேந்திய, அசோஷ்சிய, அதாகிய, அகிராகிய, ஆதியந்த ரகிதானந்த ஸ்வரூபமாய்; அக்ஷர, அமல, அப்பிரமேய, அநாசிரிய, ஆனந்த, கந்த ஸ்வரூபமாய்; அநாதார, அமிர்த, அவிதாக்கிய, அநாமய, அதிரிசிய, அத்துவிதானந்த ஸ்வரூபமாய்; அபாகிய, அன்னிய, அபாசிய, அநிர்வாச்சிய, அதீந்திரிய, அபோத்திய, அசூனிய, அக்குரோத, அபரோக்ஷாநந்த ஸ்வரூபமாய் இன்னும் இவை முதலான தன் ஸ்வரூபத்தினுடைய வர்ணநீய நாமங்களாம். இதற்குச் சம்மதிவசனம்.

சுலோகம்.

ஸச்சிதாநந்தஸ்வரூபேஸ்வாத்மாம்ருதஸரஸ்வதீ
ஸதீமுக்திஶ்ஶாஶ்வதிகாதத்ஸ்வரூபோநிரூப்யதே. (ருரு)

இதனதுபொருள்.

சச்சிதானந்த ஸ்வரூபமான ஆத்மாவென்னும் அமிர்த சாகரத்தில் நித்திய சாஸ்வதமான முத்தியிருக்கிறது. அதினுடைய ஸ்வரூபமானது நிரூபிக்கப்படுகிறது.

இப்படி ஆசாரியசுவாமிக ளாத்மபோதமென்கிற கிரந்தத்தி னிருபித்திருக்கிறு ரானபடியினுலும், வேதசாஸ்திரங்களிற் சொல்லியிருக்கிறபடியினுலும், இதுவே பிரமாணசித்தம்.

இந்த ஸ்வரூபத்தினுடைய வர்ணநீயநாமங்கள் பிரபஞ்சத்தைக்குறித்து வந்தமேதயல்லாமல் வேறல்ல. அதெப்படியென்னில், அசத்தைக் குறித்துச் சத்தென்றும், சடத்தைக் குறித்துச் சித்தென்றும், துக்கத்தைக் குறித்து ஆனந்தமென்றும், சகுணத்தைக்குறித்து நிற்குணமென்றும், ஆபரணத்தைக் குறித்து நிராவரணமென்றும், சாகாரத்தைக்குறித்து நிராகாரமென்றும், விஷயானந்தத்தைக் குறித்து நிர்விஷயானந்தமென்றும், பேதத்தைக்குறித்து அபேதமென்றும், பரோக்ஷத்தைக் குறித்து அபரோக்ஷமென்றும், துவைதத்தைக்குறித்து அத்வைதமென்றும், விகாரத்தைக் குறித்து நிர்விகாரமென்றும், ஆலம்பத்தைக் குறித்து நிராலம்பமென்றும், சங்கத்தைக்குறித்து நிர்ச்சங்கமென்றும், அப்பிரகாசத்தைக்குறித்துப் பிரகாசமென்றும், கண்டத்தைக் குறித்து அகண்டமென்றும், நாமத்தைக் குறித்து நிர்நாமமென்றும், சூனியத்தைக் குறித்துப் பூரணமென்றும், வாச்சியத்தைக் குறித்து அநிர்வாச்சியமென்றும், சத்தத்தைக் குறித்து நிர்ச்சத்தமென்றும், அஞ்சனத்தைக் குறித்து நிரஞ்சனமென்றும், வேத்தியத்தைக்குறித்து நிர்வேத்தியமென்றும், சலனத்தைக்குறித்து நிர்ச்சலனமென்றும், மிர்தத்தைக் குறித்து அமிர்தமென்றும், ஆதியந்த சகிதத்தைக் குறித்து ஆதியந்த ரகிதமென்றும், பிரபஞ்சத்தைக் குறித்து நிஷ்ப்ர

பஞ்சமென்றும், சித்தனிரோதத்தைக் குறித்து யோகமென்றும், இலட்சியத்தைக்குறித்து நிர்லட்சியமென்றும் பெயர்களாம். பின்னுஞ் சர்வம் பிரமமென்றுஞ் சர்வஞ் சூனியமென்றும் இவை முதலான தன் ஸ்வரூபத்தினுடைய வர்ணனீயநாமங்கள் பிரபஞ்சத்தைக்குறித்து அத்தியாசமாய்த் தோற்றிற்றே யல்லாமற் சுதாவாக விந்த நாமங்கள் சசவிஷாண வந்தியாபுத்திர ககனாரவிந்த மித்தியா புருஷன்போலவே காலத்திரயத்திலுந் தனக்கில்லை. ஆனபடியினால் பேதாபேத ரகிதமாய், புண்ணியாபுண்ணிய ரகிதமாய், த்வைதாத்வைத ரகிதமாய், பாவாபாவ ரகிதமாய், ஞானாஞ்ஞான ரகிதமாய், காரிய காரண ரகிதமாய், மாயாமோகரகிதமாய், பந்தமோக்ஷ ரகிதமாய், சுகதுக்கரகிதமாய், காமியாகாமிய ரகிதமாய், கம்மியா கம்மியரகிதமாய், சநநமரணரகிதமாய், விருத்திக்ஷயரகிதமாய், உதயாஸ்தமனரகிதமாய், திவாராத்திர ரகிதமாய் இவை முதலாயிருக்கப்பட்ட தொந்த ரகிதமாய், தூஷ்ணீம் பூதனாயிருக்கப்பட்ட தன்னுடைய ஸ்வரூபத்தில் அதிஷ்டானுஞ் ஞானமென்கிற ஆவரணமான மூலப்பிரகிருதியும், விக்ஷேப காரணமான மகதத்துவம், அகங்கார தத்துவம், பஞ்சதன் மாத்திரை, சூட்சுமதூலாதிப் பிரபஞ்ச மெப்படித் தோற்றுகிறதென்றால், திருஷ்டாந்த பூர்வகமாய் நிரூபிக்கிறோம்.

அந்தத் திருஷ்டாந்த மென்னவென்றால், மூலப்பிரகிருதியென்கிற மித்யாபுருஷனிடத்தில் அகங்கார தத்துவமென்கிற இல்லாத சித்திரக்கோலைக் கையிற்பிடித்துக்கொண்டு பஞ்சதன் மாத்திரை யென்கிற இல்லாத பஞ்சவன்னங்களினாற் றூல

சூட்சுமமென்கிற பொய்யான சித்திரத்தைச் சூனியமென்கிற வாகாசத்தி லெழுதினாற்போல விருக்கிறதென்று வசிட்டபக வான் வாசிட்டமென்கிற கிரந்தத்தி னிருபித்திருக்கிறு ரான படியினுலிந்தத் தூஷ்ணீம் பூதனுயிருக்கப்பட்ட தன்னுடைய ஸ்வரூபத்தில் அதிஷ்டானுஞ்ஞானமான ஆவரணமென்கிற மூலப் பிரகிருதியும், விக்ஷேபகாரணமான மகதத்துவ மகங் காரதத்துவமும், பஞ்சதன்மாத்திரை சூட்சுமதூலப் பிரபஞ்ச மும், சாக்கிர சொப்பன சுழுத்தி துரியாவஸ்தைகளும், விசுவ தைசத பிராஞ்ஞ பிரத்தியக்கு சைதன்னியமும், விராட்டு இரணியகர்ப்ப அவ்வியாகிருத சருவசாட்சித்துவம் இராஜச தாமச சத்துவமான சுத்த சத்துவமாம் சுத்த சத்துவ குணங் களும், யுத்த பரியுத்த ஆனந்த ஆத்மானந்த போகங்களும், சிற்சத்தி பராசத்தி ஆதிசத்தி இச்சாசத்தி கிரியாசத்திகளும், பிரமா விஷ்ணு ருத்திரன் மஹேஸ்வர சதாசிவ மூர்த்தி களும், நேத்திரம் கண்டம் இருதயங்களான மூர்த்தன்னிய ஸ்தானங்களும், அகார உகார மகார பிந்துமாத்திரைகளும், இதைக்குறித்துவந்த அத்யாச நாமங்களும், இதைக்குறித்துச் சொல்லப்பட்ட சாஸ்திரங்களும், இதைக்குறித்து வந்த ஆபாசங்களும், இதைக்குறித்துவந்த ஸ்வரூப வர்ணனீய நாமங்களும், இந்த ஸ்வரூபவர்ணனீயமாய்ப் பிரதிபாதிக்கிற மகாவாக்கியங்களை யுபதேசம்பண்ணிக்கொண்ட சீடர்களும், இந்தச் சீடரைக்குறித் துபதேசம் பண்ணின சற்குருக்களும், இந்தச் சற்குருக்களுடைய வுபதேசங்களும், இந்த வுபதேசத்தி னல் வந்த சிரவண மனன நிதித்தியாசனங்களும் கர்மம் பத்தி

வைராக்கியம் யோகத் தியானங்களும், சாம்பவிமுத்திரை கேசரிமுத்திரை அமனஸ்க முத்திரை மவுனமுத்திரைகளும், இந்தப் பிரபஞ்சம் அஞ்ஞானத்தினுற் றேற்றிற்றென்றும், ஞானத்தினுலில்லாமற் போயிற்றென்றும், யோகத்தினுற் றன்னைத்தான் பார்க்கவேண்டுமென்றும், ஞானத்தினுற் றன்னைத்தா னறியவேண்டு மென்றும், இப்போ தறிந்துகொண் டேனென்றும், இவைமுதலான சகல சங்கற்பப் பிராந்திகளும் மருமரீசிகையினிடத்திற் சலங் காலத்திரயத்திலு மெப்படியில்லையோ, சுத்தியினிடத்தில் ரசிதங் காலத்திரயத்திலு மெப்படியில்லையோ, இரச்சுவினிடத்திற் சர்ப்பங் காலத்திரயத்திலு மெப்படியில்லையோ, அப்படியே அதிஷ்டானுஞ் ஞானமென்கிற மூலப்பிரகிருதி முதலான சகல பிராந்திகளும் நிசானந்தானுபூதி ஸ்வரூபமாய்த் தூஷ்ணீம் பூதனுன தன்னிடத்திற் சசவிஷாண வந்தியாபுத்திர ககனுரவிந்த மித்தியா புருஷன்போலவே காலத்திரயத்திலுமில்லை. இதற்குச் சம்மதி வசனம்.

சுலோகம்.

ஸர்வஶூந்யம்மந ஶூந்யம்ஸத்யாஸத்யம்நவித்யதே
ஸ்வபாவபாவிதம்ப்ரோக்தம்ஶாஸ்த்ரஸம்பத்திபூர்வகம். (௫௪)

இதனதுபொருள்.

சாஸ்திர சம்பத்தி பூர்வமாக ஸ்வரூபத்தைப் பாவிக்கின்ற எல்லாஞ் சூனியமாய் மனது சூனியமாய்ச் சத்தியா சத்தியங்களில்லாமற் பூரணமா யிருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

சுலோகம்.

லீயந்தேநசலீயந்தேகதம்கஸ்யப்ரவர்ததே
ஸசஸர்வமஸர்வஞ்சஆத்மைவஹிஸகேவலஃ. (ருரு)

இதனதுபொருள்.

இலயிக்கிறதும் இலயிக்காததுமாயிருக்கிற பிரபஞ்சம் எவனுக் கெவ்விதமாகப் பிரவர்த்தித்திருக்கிறது, எவனுக்கு எல்லாமுண்டாயிருந்தும் உண்டாகவுமில்லை, எவனுக்கு எல்லாம் ஆத்மஸ்ரூபமே யிருக்கிறதென்று தத்தாத்திரய யோகீஸ்வரர் அவதூதகீதையென்கிற கிரந்தத்தி னிரூபித்திருக்கிற படியினாலும்.

சுலோகம்.

அவ்யக்தோயமசிந்த்யோயமவிகாரோயமுச்யதே. (ருசா)

இதனதுபொருள்.

இவ்வாத்மா அவ்வியத்தன், இவன் அசிந்தியன், இவன் அவிகாரியனெனச் சொல்லப்படுவனென்று கீதையிற் பகவா னிரூபித்திருக்கிற படியினாலும்.

சுலோகம்.

க்வப்ரவ்ருத்திர்நிவ்ருத்திர்வாக்வமுக்திஃக்வசபந்தநம்
கூடஸ்தேநிர்விகாரஸ்தேஸ்வஸ்தஸ்யமமஸர்வதா. (ருஎ)

இதனதுபொருள்.

நிர்விகாரியான கூடஸ்தனிடத்தில் எப்போதுஞ் சொஸ்தனுயிருக்கிற வெனக்குப் பிரவிர்த்தியெங்கே, நிவிர்த்தியெங்

கே, முத்தியெங்கே, பந்தமெங்கே என்று அஷ்டாவக்கிர கீதையி னிருபித்திருக்கிறபடியினலும்.

சுலோகம்.

அமநஸ்த்வாந்நமேதுஃகராகத்வேஷபயாதயஃ
அப்ராணஸ்த்வமநாஶ்ஶுப்ரஇத்யாதிஶ்ருதிஶாஸநாத். (ந௯)

இதனதுபொருள்.

அப்பிராணனென்றும், அமனஸ்தனென்றும், சுப்பிரனென்றும், வேதஞ் சொல்லுகிறபடியே எனக்கு மனதில்லாதபடியினல் துக்கமும், இராகமும், துவேஷமும், பயமுங் கிடையாதென்று ஆத்மபோதமென்கிற கிரந்தத்தில் ஆசாரிய சுவாமிகள் நிருபிக்கிறபடியினலும்.

சுலோகம்.

ப்ரஶாந்தவ்ருத்திகஞ்சித்தம்பரமாநந்ததீபகம்
அஸம்ப்ரஜ்ஞாதநாமாயம்ஸமாதிர்யோகிநாம்ப்ரியஃ. (நகூ)

இதனதுபொருள்.

சகல சங்கற்பங்களும் உபசாந்தியடைந்து பரமானந்தமேலிட்டால் அசம்பிரஞ்ஞாத சமாதியானது யோகிகளுக்குப் பிரியமானது.

சுலோகம்.

ஸ்வாநுபூதிரஸாவேஶாத்த்ருஶ்யத்வாதநபேக்ஷிதம்
நிர்விகல்பஸமாதிஸ்யாந்நிவாதஸ்தலதீபவத். (சo

இதனது பொருள்.

சுவானுபவமென்கிற வமிர்த ரசத்தி னுவேசத்தால் கிரிசி யத்தை விரும்பாதிருக்கின் நிவாதஸ்தலத் தீபம்போல விருப் பதே நிச்சலமான நிர்விகற்ப சமாதி என்று வித்யாரண்ய சுவாமிகள் நிரூபித்திருக்கிறபடியினாலும்.

சுலோகம்.

ஸம்ஶாந்தஸர்வஸங்கல்பாதிஸிலாவதவஸ்தியா꞉
ஜாட்யநித்ராவிநிர்முக்தாஸாஸ்வரூபஸ்திதி꞉பரா. (சக)

இதனது பொருள்.

சகல சங்கற்பங்களும் உபசாந்தமாய்ச் சாட்டிய நித்திரை நீங்கச் சிலையைப்போல் நிச்சலமா யிருப்பது உத்தமமான ஸ்வரூப ஸ்திதியென்று வசிட்டபகவான் வாசிட்டமென்கிற கிரந்தத்தி னிரூபித்திருக்கிறபடியினாலும், வேதாந்தானுபவ மறிந்த பெரியோர்களுக்கு ஏதாகிலு முண்டானாலல்லவா? இல்லையெனச் சொல்லவேண்டுமென்று தத்தாத்திரயயோகீஸ் வரர் பூரணானந்தபோதமென்கிற கிரந்தத்தி னிரூபித்திருக்கிற படியினாலும்.

சுலோகம்.

ப்ரத்யஸ்தமிதபேதம்யத்ஸத்தாமாத்ரமகோசரம்
வசஸாமாத்மஸம்வேத்யம்தத்ஜ்ஞாநம்ப்ரஹ்மஸம்ஜ்ஞிதம். ()

இதனது பொருள்.

பேதமிறந்ததாயும், சத்தாமாத்திர மாகியும், வாக்குக்கு அகோசரமாகியும், தன்னா லறியத்தக்கதாயு மிருக்கின்றதெது வோ அந்த ஞானமே பிரமமெனப் பெயரையுடையது.

சுலோகம்.

விபேதஜநகேஜ்ஞாநேநாஶமாத்யம்திகம்கதே
ஆத்மநோப்ரஹ்மணோபேதமஸந்தங்கஃகரிஷ்யதி· (சுரு)

இதனதுபொருள்.

பேதத்தை யுண்டுபண்ணுகிற வஞ்ஞானமானது முழுது நாசமடைந்தால் ஆத்மாவுக்கும் பிரமத்துக்குமில்லாத பேதத்தை யெவன் என்னசெய்வான்.

நிசானந்தானுபூதிப்பிரகரணம்

சம்பூரணம்.

சத்தப்பிரகரணம்

சம்பூரணம்.

புத்தகவிளம்பரம்.

மூவர்தேவாரம் (பண்முறை)	3	8	0
சப்தஸ்தலதேவாரம்	0	8	0
திருமூலர் திருமந்திரம்-ஷ்ஷ	1	8	0
திருவாசகம்	0	8	0
சிவஸ்தலமான்மியவசனம்	0	12	0
நந்தனார்சரித்திரகீர்த்தனை படங்களுடன்	0	8	0
தாயுமானசுவாமிபாடல்	0	12	0
மணிமேகலை மூலம்	0	8	0
தத்துவராயர் பாடுதுறை	0	12	0
ஸ்ரீகிருஷ்ணஸ்வாமிதூது	0	6	0
விஷ்ணுஸ்தலமான்மியம்	0	8	0
வாசுதேவமனனம்	1	0	0
சேந்தன்திவாகரம் 12-தொகுதி	0	10	0
சூடாமணி நிகண்டு 10-தொகுதியும்	1	0	0
ஷை 11, 12-வது நிகண்டுகள்	0	8	0
செய்யுளிலக்கணம்	0	8	0
சேதுபுராணவசனம் படத்துடன்	2	0	0
விருத்தாசலபுராணம் உரை	0	10	0
சானந்தகணேசபுராணம் உரை	0	12	0
ஞானப்பிரகாசதீபிகை அண்டபிண்ட பஞ்சீகரண படத்துடன்	1	0	0
பகவற்கீதைவசனம் தஞ்சைபதிப்பு	1	4	0
திருவாதவூரர்புராணம் விருத்தியுரை	1	0	0
சப்தரிஷிவாக்கியம் 5500-பாடல்	4	0	0
சாதகஅலங்காரம்	0	8	0
கட்டளைக்கொத்து 14-சேர்ந்தது	0	8	0
குமாரதேவர் 16-சாஸ்திரம்	0	10	0

புத்தகவிளம்பரம்.

ஞானவாசிட்டவசனம்	1	8	0
பிரபுலிங்கலீலை	0	8	0
வேதாந்தபோதினி	0	8	0
மனவுல்லாசகதை	0	8	0
நித்தியானுஷ்டானவிதி	0	4	0
பஞ்சதசப்பிரகரணம்	1	0	0
திருக்கடந்தைபுராணம்	0	8	0
அருட்பா திருவாசகம் முதலியன 5-சேர்ந்தது	1	12	0
சிதம்பரம் இராமலிங்கசுவாமிகள் திருவருட்பா	2	8	0
தோத்திரக்கொத்து 92-புத்தகங்களடங்கியது	0	8	0
சுப்பிரமணியபண்டிதர் ஜீவரக்ஷாமிர்தம்	4	0	0
திருவேங்கடஸ்தலபுராணம்	0	8	0
அருணாசலபுராணம் உரை படத்துடன்	0	8	0
அரிச்சந்திரபுராணமூலம்	0	8	0
இருசமயவிளக்கம் செய்யுள்	0	12	0
பெரிய வருஷாதிநூல்	0	8	0
வேதநாயகம்பிள்ளை கீர்த்தனை	0	8	0
சின்னசாமிதாஸ் கீர்த்தனை பெரிசு	1	0	0

இவை தவிரத் தங்களுக்கு வேண்டும் பலவித புத்தகங்களும் வி. பி. போஸ்டில் அனுப்பப்படும். அரைரூபாய் துகைக்குக்குறைந்த புத்தகங்கள் வி. பி. போஸ்டில் அனுப்பமுடியாது. அரை அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு ஒரு கேட்லாக்கு இனாமாக அனுப்பப்படும். மற்றவிஷயங்கள் கேட்லாக்கில் கவனித்துப் பார்க்கும்படி கோருகிறேன்.

கோ. லோகநாதமுதலியார்.
மநோன்மணிவிலாச சென்ட்ரல்புக்டிபோ,
நெ. 29, வைத்தியநாதமுதலிவீதி, சென்னை.

புத்தக விளம்பரம்.

வள்ளலார் 20-சாஸ்திரம்	1	8	0
௸ ரப்பு	1	0	0
ஆச்சாபுரஸ்தல புராணம்	0	4	0
சகாதேவர்சாஸ்திரம்-108	0	4	0
திருவள்ளுவர் குறள்-மூலம்	0	4	0
பரிபூரணானந்தபோதம்	0	4	0
நானாசிவவாதக்கட்டளை கொத்து	0	6	0
திருப்புகழ் 150-பாடல்	0	4	0
கைவல்லியநவநீத வசனம்	0	4	0
௸ திக்கு	0	8	0
கைவல்லியநவநீத மூலம்	0	2	0
நைடதச் சுருக்கம்	0	2	0
உடலறி விளக்கம்	0	1	0
சிவசந்நிதானமுறை	0	4	0
சோதிடபாலசிக்ஷை	0	6	0
அற்புத தேவாரத்திரட்டு	0	3	0
த்ருவசரித்திரக்கீர்த்தனை	0	4	0
அகஸ்தியர் 5000-பாடல்	2	0	0
அகஸ்தியர் மாந்திரீயகாவியம்-1000	0	12	0
பஞ்சதந்திரக்கதை-பாட்டு	0	4	0
கதாமஞ்சரி	0	4	0
கந்தபுராணச் சுருக்கம்	0	12	0
திருவள்ளுவர் குறள்-மூலம்	0	4	0
காமாக்ஷியம்மன் தபசுமாலை	0	4	0
நூதன பத்மினிசபா	0	4	0
பார்வதி சுந்தரிநாடகம்	0	4	0

புத்தகங்கள் வி. பி. போஸ்டில் அனுப்பப்படும்.

☞ கொ - லோகநாத முதலியார்,

மனோன்மணிவிலாச சென்ட்ரல் புக்டிபோ,

29 - நெ. வைத்தியநாத முதலி வீதி, சென்னை.